ஸ்ரீ:॥

ஸ்ரீமதே நாராயணாய நமஃ ॥

ஸ்ரீவிகநஸ மஹாகுரவே நமஃ ॥

ஸ்ரீ வைகானஸம்

மாத பத்திரிகை

ஸ்ரீ விகனே முனீந்த்ரஃ

மாலை:2 ஸ்ரீ விக்ரம வருஷம் ஆனி மாதம் மலர்: 5

Vol.2 No.5 June 2000

வருட சந்தா ரூ.60.00 தனி இதழ் விலை ரூ. 5.00

இந்த மாதம் சந்தா முடிவடையும் நபர்களின் விபரம் :

1. A.K.S. 5299 ஸ்ரீமதி C.A. வரலெஷ்மி, குரோம்பேட்டை - 600 044.
2. A.K.S. 5320 ஸ்ரீ R. தாமோதர பட்டாச்சார், வில்லிவாக்கம் - 600 049.
3. A.K.S. 5319 ஸ்ரீ M.S. வெங்கட்ராகவ பட்டாச்சார், குன்றத்தூர் - 600 069.
4. A.K.S. 5317 ஸ்ரீ T. வரத பட்டாச்சார், நசரத்பேட்டை - 602 103.
5. A.K.S. 5316 ஸ்ரீ R. அனந்தநாராயண பட்டாச்சார், களம்பூர் - 606 903.
6. A.K.S. 5311 ஸ்ரீ S. சௌரிராஜ பட்டாச்சார், திருகண்ணபுரம் - 609 704.
7. A.K.S. 5322 ஸ்ரீ K. பிரபாகர பட்டாச்சார், பவுண்டரீகபுரம் - 612 202.
8. A.K.S. 5298 ஸ்ரீ S.D. ராஜம் பட்டாச்சார், ஹரித்துவரமங்கலம் - 612 802.
9. A.K.S. 5312 ஸ்ரீ S. பார்த்தசாரதி பட்டாச்சார், மேலவீதி - 613 009.
10. A.K.S. 5304 ஸ்ரீ P.S. ரங்கநாத ஐயங்கார், பெரமூர் ஐய்யம்பாளையம் - 621 202.
11. A.K.S. 5306 ஸ்ரீ V.S. ராமமூர்த்தி ஐயங்கார், பெரமூர் ஐய்யம்பாளையம்- 621 202.
12. A.K.S. 5302 ஸ்ரீ ஸ்ரீனிவாச ராகவ ஐய்யங்கார், பிச்சாண்டார் கோவில்- 621 216.
13. A.K.S. 5315 ஸ்ரீ P.N. ஸ்ரீனிவாச பட்டாச்சார், பெரியகுளம் - 625 601.
14. A.K.S. 5316 ஸ்ரீ R. சுந்தரம், புதுவயல் - 630 108.
15. A.K.S. 5318 ஸ்ரீ K. சேஷாத்திரி பட்டாச்சார், புனிமாங்காடு - 631 212.
16. A.K.S. 5324 ஸ்ரீ R. வெங்கட்ராம பட்டாச்சார், முள்ளிப்பட்டு - 632 316.
17. A.K.S. 5314 ஸ்ரீ N. ராஜாமணி பட்டாச்சார், மட்டதாரி - 632 504.
18. A.K.S. 5301 ஸ்ரீ C.K.R. பிச்சுமணி ஐய்யங்கார், குணசீலம் - 639 101.
19. A.K.S. 5303 ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐய்யங்கார், அந்தநல்லூர் - 639 101.
20. A.K.S. 5313 ஸ்ரீ S. ஸ்ரீதர பட்டாச்சார், திருப்பூர் - 641 601.

மேற்கண்ட வாசக ஸ்வாமிகள் சந்தாவை உடனடியாக புதுபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீவைகானஸ குறள் மொழிகள்

எல்லாத் தொழிலும் தொழிலல்ல வைகானஸர்க்கு
அர்ச்சையாம் தொழிலே எழில்.

பிறப்பால் நாம் பெறுகின்ற பேறு-வேறு
எவர்க்குமே இல்லை நீ கூறு.

கேடில் விழுச் செல்வம் அர்ச்சை வைகானஸர்க்கு
மாடல்ல மற்றையவை.

வேண்டுதல் வேண்டாமை இலா வைகானஸர்க்கு
யாண்டும் இடும்பை இல.

படைப்பு
S. ரகுவீர பட்டாச்சார்
மதுரார்ந்தகம்.

ஸ்ரீ: ॥

ஸ்ரீவிகநஸ மஹா குரவே நமः ॥



ஸ்ரீ வைகானஸம்

மங்களாஶாஸநம்

ஸ்ரீவைகாநஸ பத்ரிகா விகநா கருணோத்திதா ।
ஸ்ரீநிவாஸ கடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ।
ஸ்ரீவைகாநஸ பத்ரிகா ஸ்ரீஶஸ்ய ப்ரியயா ஸஹ ।
வைகாநஸாநாம் ஸர்வேஷாம் கேஹே கேஹே
ஸதா வஸேத் ॥

ஸ்ரீமத் விகநஸாசார்யருடைய கருணையினால் உண்டாகி யிருக்கும் இந்த ஸ்ரீவைகாநஸ பத்திரிகை ஸ்ரீநிவாஸனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தினாலும் சந்திரன் நக்ஷத்திரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது. ஸ்ரீவைகாநஸர்கள் அனைவருடைய க்ருஹங்கள்தோறும் இந்த ''ஸ்ரீவைகாநஸம்'' பத்திரிகை ஸ்ரீமந் நாராயணனுடைய ப்ரியையான ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக் கடவது.

ஆசிரியர்
N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார் D.E.E.,

இணை ஆசிரியர்
D. மோகன் பட்டாச்சாரியார், M.A.,

வெளியிடுவோர்:
AKS டிரஸ்ட்
24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
Ph: 044-4710036 Email : MOHAND@eth.net

மாலை: 2 ஸ்ரீ விக்ரம வருஷம் ஆனி மாதம் மலர்: 5

ஸ்ரீஃ

விஷய ஸூசிகை

ஆசிரியர் உரை 5

பஞ்சாங்க ஸங்க்ரஹம், தர்ப்பண ஸங்கல்பம் 6

ஸ்ரீவைகானஸ கல்பஸூத்ரம் 7

உத்ஸவாதி விவரங்கள் 9

மருத்துவக்கட்டுரை 10

திவ்ய தேசங்கள் 11

ஸ்ரீ புருஷஸூக்த வ்யாக்யானம் 13

மணமாலை 15

ஸ்ரீவைகானஸமும் - ஆண்டாளும் 16

மணிஓசை 18

அம்மாமிக்கு அன்புடன் 19

வடமொழி அகராதி 21

இந்த மாத ப்ரபலம் 23

தையற்கலை 24

சிறுவர் பகுதி 25

கேள்வி பதில் 28

இப்பத்திரிகைக்கு வரும் வாசகர் கடிதங்கள், கட்டுரைகள், கருத்துக்களை தொகுக்கவோ, சுருக்கவோ, ஒதுக்கவோ ஆசிரியர் குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

இப்பத்திரிகையில் வெளியாகும் கட்டுரைகள், மற்றும் வாசகர் கேள்விக்கான பதில்கள் வித்வான்கள் மற்றும் எழுத்தாளர்களின் சொந்தக்கருத்தாகும். இவற்றால் உண்டாகும் விளைவுகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ஆசிரியர் குழு பொறுப்பேற்காது.

மணமாலை பகுதியில் வெளியாகும் வதூ/வரன் குறித்த செய்திகள் பத்திரிகைக்கு கடிதம் மூலம் பெற்றவையே- வதூ/வரன்களைப் பற்றி தீர விசாரித்துச் செயல்படவும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு AKS டிரஸ்ட் மற்றும் ''ஸ்ரீவைகானஸம்'' பத்திரிகை பொறுப்பேற்காது.

உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?
உடனே புதுப்பிக்கவும்.

ஆசிரியர் உரை

பேரன்புடைய வாசகஸ்வாமிகள் ஸன்னிதியில் விண்ணப்பம்.

''ஸ்ரீவைகானஸம்'' வாகச ஸ்வாமிகளுடைய ஒத்துழைப்பினாலே பதே பதே வ்ருத்தியாகிக் கொண்டிருக்கிறது நம் இதழ் சம்பந்தமாக வாசக ஸ்வாமிகள் அனைவரும் தொடர்ந்து தங்களுடைய பொன்னான கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம். தவிர்க்க முடியாத காரணத்தால் குறுக்கெழுத்து பரிசுப் போட்டி இடம்பெற வில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீவைகானஸ இளைஞர் நற்பணி சங்கத்திற்கு ஸ்ரீ வில்லிபுத்தூர் ப்ருஹஸ்பதி ஸ்ரீ.உ.வே. வெங்கட்ராம பட்டாச்சார் நினைவாக அவரது குமாரர் ஸ்ரீ V. அனந்தஸயண பட்டாச்சார் க்ரந்தலிபி கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் வழங்கியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். இந்த க்ரந்தலிபியை கம்யூட்டரில் கொண்டுவர நமது ஆசிரியர் குழு பெறுமுயற்சியெடுத்து சாதித்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். நம் பத்ரிகையில் வெளியிட மேலும் பல ஸ்தானவிஷயங்களை எழுதியனுப்புமாறும் ஸ்வாமிகளைப்ப்ரார்த்தித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
ஆசிரியர் குழு

வையம் புகழும் வைகானஸம்

வைகானஸர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்
வையத்துள் வாழ்வாங்கு வாழ
வழிகாட்டிடும் வைகானஸம்
ஊருக்கு ஒருவராய் இருப்பவர்களை
ஒன்று சேர வைத்ததே வைகானஸம்
மங்கையின் வாழ்வு மலர மணாளனை
கண்டுபிடிக்கும் வைகானஸம்
அநேக வைகானஸர்கள் அறியாத
விஷயங்களை அளித்திடும் அமுதசுரபி
அத்ரி ப்ருகு மரீசி காஸ்யபரை அறியாத
நாம் அவர் தம் விஷயங்களை அறிய வைக்கும் வைகானஸம்.
நம் ஆன்மிக குல திலகங்களை
அறிய வைக்கும் அற்புத மடல்
இன்னும் எத்தனையோ விஷயங்களை
அள்ளித் தர விருக்கும் ஸ்ரீ வைகானஸம்
என்னும் நூல் வாழிய வாழியவே!

அன்பன்,
S. ராமஸ்வாமி பட்டாச்சார்,
பொன்மலை, திருச்சி.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கலியுகாதி 5102 விக்ரம உத்தராயணம், கிரிஷ்மருது, ஆனி மாதம்

June 2000	வைகாசி	கிழமை	முக்கிய அம்சம்
14	32	புதன்	மாசப்பிறப்பு 10.48 p.m. IST.
15	ஆனி 1	வியா	சூன்ய திதி
16	2	வெள்ளி	பௌர்ணமி
20	6	செவ்	ஸ்ரவண விரதம்
28	14	புத	ஸர்வ ஏகாதசி
ஜூலை			
1	18	சனி	ஸர்வ அமாவாசை
12	28	புத	ஏகாதசி

தர்ப்பண ஸங்கல்பம்

கலியுகாதி 5102 ஆனி மாதம் 1 ஆம் தேதி (15.6.2000) மாசப்பிறப்பு

ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீவிக்ரம நாம ஸம்வத்ஸரே உத்தராயணே கிரீஷ்மருதௌ ரிஷபமாஸே ஶுக்லபக்ஷே சதுர்தஸ்யாம் ஶுபதிதௌ குருவாஸர யுக்தாயாம் அனுராதா நக்ஷத்ரயுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் சதுர்தஶ்யாம் புண்ய திதௌ மிதுனரவி ஸங்க்ரமண காலே காவேரீ மத்யே மிதுன ரவி ஸங்க்ரமண ஶ்ராத்தம் தில தர்ப்பணஞ்சபேண அத்ய கரிஷ்யே.

ஆனி மாதம் 17 ஆம் தேதி (1.7.2000) அமாவாஸ்யை

ப்ரபாவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே ஸ்ரீவிக்ரம நாம ஸம்வத்ஸரே உத்தராயணே கிரீஷ்மருதௌ மிதுனமாஸே க்ருஷ்ண பக்ஷே அமாவாஸ்யாயாம் சுபதிதௌ ஸ்திரவாஸர யுக்தாயாம் மிருகஶீர்ஷ நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண ஏவங்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்ய திதௌ தர்ஶ புண்யகாலே காவேரீமத்யே தர்ஶ ஶ்ராத்தம் திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

ஶ்ரத்தாஞ்ஜலி

சென்ற சித்திரை மாதம் 12 ஆம் தேதி (24.4.2000) அன்று காலை சிங்கப்பெருமாள் கோவில் ஸ்ரீ.உ.வே. தேவநாத பட்டாச்சார் ஆசார்யன் திருவடியடைந்தார்.

சென்ற சித்திரை மாதம் 14 ஆம் தேதி (26.4.2000) அன்று இரவு கோவில்பதாகை ஸ்ரீமதி சரோஜா அம்மாள் ஆசார்யன் திருவடியடைந்தார்.

மேற்கண்ட குடும்பத்தினர்களுக்கு வாசக ஸ்வாமிகள் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

ஸ்ரீவைகானஸம், AKS Trust

ஸ்ரீவைகாநஸகல்பசூத்ரம்

(சங்கேந்தி டாக்டர் S.முத்துபட்டர், விரிவுரையாளர்,
சம்ஸ்க்ருத பிரிவு, விவேகானந்தா கல்லூரி, சென்னை - 4)

ச்ரவணே ச்ராவனே சுக்ல பௌர்ணம்யாமிந்துவாசரே ।
புண்யம் ஸ்ரீநைமிசாரண்யம் அலம் சக்ரேஸ்து மங்களம் ॥

பதினைந்தாவது ஸம்ஸ்காரம் - பாராயணவ்ரதபந்தவிஸர்கம்

இந்த ஸம்ஸ்காரம் ஸ்ரீவிகநஸமுனிவரால் அனுக்ரஹித்த ஸ்ரீவைகாநஸ கல்பசூத்ரத்தில் இரண்டாவது ப்ரச்னம் ஒன்பதாவது கண்டத்தில் கூறப்படுகிறது. இந்த ஸம்ஸ்காரம் செய்வதற்கு முன் (ஆஷாட) ''உபாகர்ம'' என்ற ஸம்ஸ்காரம் செய்யப்படவேண்டும். ஆனால் நமது சூத்ரகாரர் ஸம்ஸ்காரங்களை படிக்கும் பட்டியலில் பாராயண வ்ரதபந்த விசர்கமான இந்த ஸம்ஸ்காரத்திற்கு பிறகுதான் உபாகர்மாவை படித்துள்ளார். இதற்கு காரணங்களை என்ன என்று பாஷ்யகாரர்கள் ஸ்ரீந்ருஸிம்ஹ வாஜபேயீ, ஸ்ரீநிவாஸமகி போன்றவர்கள் கூறுகிறார்கள். ப்ராஜாபத்ய வ்ரதமும், உபாகர்மாவும் ஒன்றைப்போல் இருப்பதாலும், வ்ரதங்களை பந்தனம் (எடுத்துக்கொள்வதும்), வ்ரதங்களை விசர்ஜனம் செய்வது (விட்டுவிடுவது) என்ற இரு மங்களகரமான கார்யங்கள் நன்கு தெரியவேண்டும் என்பதற்காக சுக்ரிய வ்ரதத்தின் கடைசியில் ''உபாகர்ம'' ஸம்ஸ்காரம் விளக்கப்படுகிறது என்கிறார்கள். (அன்யோன்ய ஸாபேக்ஷத்வ ஞாபனார்த்தம் வ்ரதவிஸர்ஜனஸ்ய அத்ர கர்த்தவ்ய ஞாபனார்த்தம்) ஆனால் ஆஷாட உபாகர்ம முடிந்தால்தான் வேதாரம்பமும் அஷ்டாக்ஷர மந்த்ரங்களும் அனுஷ்டிக்க ப்ரஹ்மசாரி முழு அருகதையுடையவனாகிறான். இவ்விஷயத்தை ஸ்ரீநிவாஸமகி உபாகர்ம அகரணே ப்ரஜாபத்ய வ்ரத அதிகார அபாவாத் என விளக்கியுள்ளார். இருப்பினும் ஸ்ரீவிகநஸ முனி அனுக்ரஹித்த சூத்திரத்தின்படி 15 வது ஸம்ஸ்காரமான பாராயண வ்ரதபந்தவிசர்கம் இங்கு தொகுக்கப்படுகிறது.

பாராயண வ்ரதபந்தவிசர்கம் என்றால் ஆக்னேயாதி வ்ரதபந்தங்களைச் செய்து கடைசியில் சுக்ரியவ்ரதம் செய்து வ்ரதங்களை முடிப்பது என்பதாகும். அதாவது வேதாத்யயனம் செய்யும்போது அவ்வப்போது பழயபாடங்கள் முடிவுபெற்று புதியபாடங்கள் துவங்குவதற்கு முன் குறிப்பிட்ட மந்த்ரங்களுடன் ஹோமம் செய்வது எனப்பொருள். இச் சம்ஸ்காரத்திற்கு நாந்தீமுகம் கிடையாது.

உபநயனமான பின்பு நான்கு, ஐந்து, ஏழு ஆகிய நாட்களில் புருஷ நக்ஷத்ரத்தில் சிஷ்யனை காலையில் உபநயனம் செய்துகொள்ளச் சொல்லி ஸ்னானம் ஸந்த்யாவந்தனம் போன்ற நித்யகர்மானுஷ்டானங்களை முடித்து கிழக்கு முகமாக உட்கார்ந்துகொண்டு அக்னியை பரிஷேசனம் செய்யவேண்டும். பாராயண வ்ரதபந்த விசர்கம் கரிஷ்யே என ஸங்கல்பம் செய்துகொண்டு தாதாதி ஹோமங்களைச் செய்து ஸாவித்ரீ வ்ரதசூக்தத்தை அனுஷ்டித்து 'அசாரிஷம்'' என்ற மந்திரத்தில் விஸர்ஜயாமி என்று கூறி ஸாவித்ரீ வ்ரதத்தை விஸர்ஜனம் செய்ய வேண்டும்.

மௌஞ்ஜீ, தண்டம் மான்தோல், வஸ்த்ரம் ஆகியவற்றை ஜலத்தில் போட்டுவிட்டு ஸ்னானம் செய்யவேண்டும். உபநயனத்தில் கூறிய

மந்த்ரங்களை மறுபடியும் அனுஷ்டித்து புதிதாக மௌஞ்ஜீ, தண்டம், மான்தோல், வஸ்த்ரம் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளவேண்டும். புதிதாக யக்ஞோபவீதம் தரித்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வ்ரத விஸர்ஜனம், வ்ரதபந்தனத்தின்போது நூதனமாக/புதிதாக அனைத்தையும் தரித்துக் கொள்ளவேண்டும். 'ப்ரஜாபதயே'' என ஆரம்பிக்கும் மந்த்ரங்களைக் கூறி ப்ரஜாபத்யவ்ரதம் பந்தயாமி என சிஷ்யன் ஸங்கல்பித்து கொண்டு வேதத்தில் ப்ராஜாபத்ய மந்த்ரங்களை அத்யயனம் செய்யவேண்டும். மூன்று வருடத்திற்கு மேல் இவ்விரதத்தில் ப்ரஹ்மசாரி இருக்ககூடாது. ஆதலால் ஒவ்வொரு வருடமும் புதிதாக வ்ரதங்களை மேற்கொள்ளவேண்டும். ஸோமாய காண்டரிஷயே என ஆரம்பிக்கும் மந்த்ரத்தால் ப்ராஜாபத்யத்தை முடித்து, ஸௌம்ய வ்ரதத்தை மேற்கொள்ள வேண்டும். ஒரு வருடம் இவ்வ்ரதத்தை கடைபிடிக்கலாம். அக்னயே காண்டரிஷயே என்றாரம்பிக்கும் மந்த்ரத்தால் ஸௌம்ய வ்ரதத்தை முடித்து ஆக்னேய வ்ரதத்தை மேற்கொள்ள வேண்டும். இதை ஒரு வருடகாலம் அனுஷ்டிக்கலாம்.

ஆக்னேய வ்ரதத்தை முடித்து வைச்வதேவ வ்ரதத்தை ப்ராரம்பிக்க வேண்டும். ஒரு வருடகாலம் இவ்விரதத்தை கடைபிடிக்கலாம். ப்ரஹ்மணே காண்டரிஷயே என்றாரம்பிக்கும் மந்த்ரத்தால் வைச்வதேவ வ்ரதத்தை முடித்து ப்ரஹ்ம வ்ரதத்தை ஆரம்பிக்க வேண்டும். இதை ஒரு வருடகாலம் மேற்கொள்ளலாம். ப்ராஜாபத்யாதி வ்ரதங்களை பந்தனம் செய்துகொள்ளும்போது தாதாதி ஹோமத்தைச் செய்து அதை தொடர்ந்து (பந்தனம் செய்துக்கொள்ளும்) அந்தந்தமந்த்ரங்களையும் ஹோமம் செய்வது உத்தமம்.

ருதஞ்ச ஸத்யஞ்ச, தேவக்ருதஸ்ய, யன்மே கர்பே, தரத்ஸ மந்தீ ஆகிய மந்த்ரங்களை ப்ராஜாபத்யவ்ரதத்திலும், வஸோஃ பவித்ரம், பவஸ்வ விச்வசர்ஷணே என்ற மந்த்ரங்களை ஸௌம்ய வ்ரதத்திலும் ஜாதவேதஸே என்றாரம்பிக்கும் மந்த்ரத்தை ஆக்னேய வ்ரதத்திலும், விஷ்ணோர்னுகம், ஸஹச்ரசீர்ஷா, த்வமக்னே ருத்ரஃ, ஆத்வாஹார்ஷம் என்ற மந்த்ரங்களை வைச்வதேவத்திலும் ஏகாக்ஷரம் த்வக்ஷாரிதாஸி என்ற மந்த்ரத்தை ப்ரஹ்ம வ்ரதத்திலும் அத்யயனம் செய்யவேண்டியது. ஏன் இவ்வாறு செய்யவேண்டுமென்றால் (ஸவிதா ப்ரஸவானாமீசே, ப்ராஜாபத்யோ வை புருஷஃ, ஸௌம்யோ வை தேவதயா புருஷஃ, ஆக்நேயோ வை ப்ராஹ்மணஃ, வைச்வதேவ்யோ வை ப்ரஜாஃ) என்று பரமாத்மா ஸர்வாத்மாவாக 'இருப்பதால் ஒவ்வொரு தேவதையை குறித்தும் ஹோமம்/பாராயணம்/அத்யயனம் செய்வது உத்தமமாகும். இதனால் அனைத்துபாபங்களும் அழிகிறது என்று பாஷ்யகாரர் குறிப்பிடுகிறார்.

மேற்கூறியபடி ப்ராஹ்ம வ்ரதத்தை செய்து முடித்தவுடன் அதை விஸர்ஜனம் செய்து (அக்னே வ்ரதபதே சுக்ரியவ்ரதம் பந்தயாமி) சுக்ரிய வ்ரதத்தை மேற்கொள்ளவேண்டும். இந்த வ்ரதத்தில் 3 அல்லது 6 மாதகாலம் தான் இருக்கவேண்டும். அதற்குமேல் ஸ்னாதகனாக மாறவேண்டும். சிதஸ்ஸ்த பரிசிதஸ்ஸ்த என்ற வேத மந்த்ரத்தால் தலைப்பாகை தலையில் துணியை/துண்டை கட்டிக்கொள்ள வேண்டும். ஏன் என்றால் சுக்கிர விரதத்தை மேற்கொண்டால் அருகிலுள்ள ஊர்களுக்கும், வனம்/காடு போன்ற இடங்களுக்கும் செல்லவேண்டும். அவ்வாறு செல்லும்போது சூரிய ஒளியால் முகம் கருத்துவிடக்கூடாது

என்பதால் தலைப்பாகை கட்டிக்கொள்ளச் சொல்லுகிறார் சூத்ரகாரர். (ஸூர்யோ நாபிதபேத்முகஸ்ய) முகத்தையும் மூடிக்கொள்ளலாம் என்கிறார். பெண்களிடமும் ஸூரத்களிடமும் பேசாமல் சுக்ரியப்ராஹ்மணம் அருணம் ஆகியவற்றை அத்யயனம் செய்யவேண்டும். ஆருணத்தை காட்டில் தான் அத்யயனம் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் அவன் தபஸ் நிறைந்தவனாகவும், புண்யம் நிறைந்தவனாகவும் ஆகிறான் என்று வேதம் கூறுகிறது. தபஸ்வீ புண்யோ பவதி, தபஸ்வீ புண்யோ பவதி, இவ்வாறு வேத வ்ரதங்களை நாமும் அனுஷ்டித்து புண்யவான் களாவோமாக.

மங்களானி பவந்து (தொடரும்)

உத்ஸவாதி விவரங்கள்

கலியுகாதி 5102 ஸ்ரீவிக்ரம வருஷம் ஆனிமாதம்

ஆனி	ஜூன்	கிழமை	உத்ஸவம்
1	15	வி	திருவல்லிக்கேணி ஸ்ரீநருஸிம்ஹர் கருடசேவை
5	19	தி	திருவல்லிக்கேணி ஸ்ரீநருஸிம்ஹர் திருத்தேர்
1,2	15,16	வி,வெ	திருமலை ஸ்ரீஸ்ரீனிவாஸர் ஜ்யேஷ்டாபிஷேகம்
12-14	26-28	தி-பு	திருவல்லிக்கேணி ஸ்ரீரங்கனாதர் வஸந்த உத்ஸவம்
	ஜூலை		
18-24	2-8	ஞா-சனி	திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோடை உத்ஸவம்
26	10	தி	மதுரை கூடலழகர், திருவல்லிக்கேணி, மேற்கு மாம்பலம், பட்டணம் கோவில் ஆனி கருடன்
27,28	11,12	செ,பு	திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜர் ஜ்யேஷ்டாபிஷேகம்

11.6.2000 முதல் 15.6.2000 வரை உத்தர பிரதேசம் மாநிலம் நைமிசாரண்யத்தில் ஸ்ரீநிவாச ஸ்வாமி ஸன்னதியில் ப்ரஹ்மோத்ஸவம்

சென்ற 16-5 முதல் 26-5-2000 வரை சென்னை தண்டையார்பேட்டை ஸ்ரீஸ்ரீநிவாஸ வரதராஜ பெருமாள் திருக்கோயில் ப்ரஹ்மோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது. சென்ற 14/6/2000 அன்று ஆயலூர் ஸுந்தரராஜப் பெருமாள் ஆஸ்தானம், சாற்றுமறையும், கிளாம்பாக்கம், ஸ்ரீநிவாஸப்பெருமாள் கருடசேவையும் சிறப்பாக நடைபெற்றன.

தஞ்சை Dt வரகூர் ஸ்ரீவேங்கடேஸப் பெருமாள் கோயிலில் சென்ற 15/5, 1715, 20/5,24/5 தேதிகளில் கல்யாண உத்ஸவங்கள் நடைபெற்றன. வரகூர் ஸன்னிதி ப்ரார்த்தனை ஸ்தலமாக உள்ளது. சென்ற 19/5 அன்று ஏகதின வக்ஷார்ச்சனையும் நடைபெற்றது.

ஜயவிஜயர்கள்

ஸ்ரீநருஸிம்ஹ வாஜபேயி அருளிய பகவதர்ச்சா ப்ரகரணத்தில் 'ஐந்தாவது கண்டத்தில், 6 வது த்வாரத்தில் ''ஷஷ்டம த்வாரே ஜய விஜயௌ'' என்று குறிப்பிடுகிறார். இவ்விஷயம், அனேகமாக, ஸ்ரீப்ருகுப்ரோக்தமான வாஸாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது என்பது பெரியோர்கள் கருத்தாகும்.

ஸ்ரீ.உ.வே. வாஸுதேவ கோவிந்த ராஜபட்டாச்சார், மதுரை

மருத்துவக் கட்டுரை-6

எஸ். ஸ்ரீதரன், பரம்பரை சித்த மருத்துவர், சதுரங்கப்பட்டினம்.

ஆமலகம்

இது ஒரு காயகற்ப மூலிகை. பல மருந்துகளின் கூட்டு மருந்தாகவும் சில வியாதிகளுக்கு நேரிடையாக பயன் அளிக்கக் கூடிய உன்னத மூலிகை. வைதீகத்திலிருந்து பல ஸத்விஷயங்களிலும் பயன்படுகிறது. சமையலிலும் பெரும் பங்கு வகிக்கிறது. இதன் பழம் பச்சையாக இருக்கும்போது வெண்மஞ்சள் நிறமாகவும் உலர்ந்த பின் கருப்பு நிறமாகவும் இருக்கும். ஆமலகம், ஆலகம், ஆம்பல், ஆமரிகம், தாத்தாரி, தாத்திரி கோரங்கம், மிறுதுபாலா, மீதுந்து எனப் பல பெயர்களில் வழங்கும் இந்த மூலிகை குபேரபட்டணத்தின் ஸ்தல விருட்சம். இந்த கனியைத்தான் அன்று அதியமான் ஔவை பிராட்டிக்கு கொடுத்தது. ஆதிசங்கரருக்கு தரித்திரத்தில் வாழ்ந்த பெண்மணி பிச்சையிட்டது. துவாதசி அன்று இந்த கனியை உணவில் சேர்த்தால்தான் ஏகாதசி உபவாஸ விரதம் பூர்த்தியானதாக பெரியோர்கள் நம்புவது. இத்தகைய சிறப்பு மிக்க இந்த ஆமலகம் நெல்லி, கருநெல்லி, அருநெல்லி என மூன்றுவகைப்படும். இதில் கருநெல்லி கிடைப்பது மிக அரிது. அருநெல்லி பித்த சம்பந்தமான கோளாறுக்கு நல்லது. இதில் உலர்ந்த நெல்லியைத்தான் நெல்லிமுள்ளி என அழைப்பர். நெல்லி ஊறுகாயை பகல்போது உண்ண வேண்டும். இரவில் சாப்பிடுவது கூடாது. இதனால் நெறி, ஐயநோய், பீநிசம், வாய்நீர் சுரப்பு, வாந்தி, மயக்கம், தலைசுற்றல், மலபந்தம் முதலியன ஒழிந்து அழகுண்டாம் என தேரையர் எனும் சித்தர் கூறுகிறார். மேற்படி மூலிகையின் மருத்துவ தன்மையை சற்று பார்ப்போம்.

1. சிலருக்கு பித்தம் அதிகமாகி வாந்தி, தலைசுற்றல் முதலியன காலையில் ஏற்படும். இதற்கு ஒரு பிடி நெல்லி இலையை இரண்டு டம்ளர் தண்ணீரில் போட்டு அரை டம்ளராக இறுத்து குடிக்க பித்தம் சாந்தியாகும். ஒரு சிலருக்கு இருமுறை நீர்போல் (பேதி) பித்தம் வெளியேறும்.

2. டயாபடிஸ் எனும் நீர்ரோகம் நீங்க சிலர் இன்சுலின் எனும் ஊசிமருந்தை உடலில் ஏற்றிக்கொண்டு வலியால் வேதனைப்படுவோர் கீழ்க்கண்ட மருந்தை சாப்பிட்டால் சர்க்கரை வியாதி பூரண குணமடையும். பச்சை நெல்லி இதனை இடித்து துணியில் வைத்துப் பிழிந்து சாறு அரை அவுன்ஸ் வெந்தயப்பொடி 1/4 டீஸ்பூன் போட்டுச் சாப்பிடலாம். மேற்படி பச்சை நெல்லி கிடைக்காத பட்சத்தில் நெல்லிமுள்ளி வாங்கி (10 நெல்லிமுள்ளி) ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு அரை டம்ளராகக் காய்ச்சி வடிகட்டி தேன் கொஞ்சம் எலுமிச்சம் பழ ரசம் கொஞ்சம் சேர்த்து சாப்பிட டயாபிடிஸ் போயே போச்சே.

3. நெல்லி தைலம் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். மேற்படி தைலத்தை தினமும் தலைக்கு தடவி வருவதால் முடி உதிர்தல், பொடுகு, மாலைக்கண், காமாலை, பித்த சம்பந்தமான வியாதி விலகும்.

4. அருநெல்லிக்காய் சாறு ஒரு பங்கு இரண்டு அல்லது மூன்று பங்கு சர்க்கரை சேர்த்து தயாரித்த சர்பத் 50 மி.லி வீதம் தண்ணீரில் கலந்து சாப்பிட உட்சூடு, வறட்சி, நீர்வேட்கை (தாகம்) வெள்ளைபடுதல் இவை குணமாகும்.

5. நெல்லி இலைக் கொழுந்தை அரைத்து மோரில் கலந்து சாப்பிட சீதக்கழிச்சல் குணமாகும். (தொடரும்)

திவ்ய தேசங்கள் - 6

D. மோகன் பட்டாச்சார், M.A., இணை ஆசிரியர் ஸ்ரீ வைகானஸம்

திருவெள்ளறை (ஸ்வேதகிரி க்ஷேத்திரம்)

இந்த ஸ்தலம் திருச்சியிலிருந்து துறையூர் போகும் பஸ் பாதையில் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஸ்ரீரங்கத்திலிருந்து வடக்கே சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு வசதிகள் எதுவும் இல்லை. திருச்சியில் தங்கி சேவித்துவிட்டு திரும்பிப் போகலாம். இது சோழநாட்டுத் திருப்பதியைச் சேர்ந்த ஸ்தலம்.

ஸ்தல புராணம்

ஒருசமயம் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலுடன் மஹாலக்ஷ்மி உல்லாசமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது லக்ஷ்மியின் கருணையால் ஸகல ஜீவராசிகளும் மிகவும் சந்தோஷமாக இருப்பதைக் கண்ட திருமால் தேவியே இப்போது உமக்கு வேண்டிய வரம் கேள் என்றார். அதற்கு மஹாலக்ஷ்மி பிரபுவே எனக்கு இந்த பாற்கடல் பிறந்தகம். இவ்விடத்தில் தேவரீரைக் காட்டிலும் அதிகமான ஆதிபத்யம் வேண்டும் என்று வரம் கேட்க அதற்கு திருமால் நித்யசூரிகள் வாழும் வைகுண்டத்தில் நிறைவேற்ற முடியாது. இங்கு நானே ஸகலமும். ஆனாலும் பூலோகத்தில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளப் போகிறேன். அப்போது உன் இஷ்டத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நான் திருவெள்ளறையில் ப்ரத்யக்ஷமாகி சிபி சக்கரவர்த்திக்கு தரிசனம் தரும் வேளை வரையில் அங்கே போய் தபஸ் செய். உன் இஷ்டம் நிறைவேறும் என்றார். மஹாலக்ஷ்மி அதன்படி இந்த ஸ்தலத்தில் தற்போது பூங்கிணறு என்று அழைக்கப்படும் கிணற்றில் உள்ள குகையில் தவம் செய்துகொண்டு இருந்தாள்.

இது இவ்வாறு இருக்கையில் அயோத்தியா நகரில் சிபி என்ற அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அப்போது பாரத தேசத்தின் தென்பகுதியில் மாரீச-ராவணாதி ராக்ஷஸர்களால் யாகங்களுக்கு ஹிம்சை ஏற்படுவதாக செய்திகள் வரவே உடனே அரசன் தனது ராஜாங்கத்தை தற்காலிகமாக மந்திரிகளிடம் ஒப்படைத்துவிட்டு தானே படை நடத்தி தென்திசையை நோக்கி வந்தான். அதுசமயம் நீலிவனம் என்னும் ரமணீயமான தோட்டத்தின் அருகேயுள்ள ஸ்வேதகிரியில் முகாம் இட்டு படைகளுடன் தங்கி இளைப்பாறினான். அப்போது ஒரு அதிசயம் நடந்தது. அன்றைய இரவில் என்றும் கண்டிராத ஒரு பெரிய ஸ்வேத வராஹம் (வெள்ளை பன்றி) சேனையின் முன் தோன்றுவதும் மறைவதுமாக இரவு முழுவதும் தொல்லை கொடுத்து படைவீரர்களை அலைக்கழித்தது. சோர்ந்துபோன வீரர்கள் அரசனிடம் விவரத்தைக் கூறினார்கள். உடனே அரசன் தானே சென்று அதைப் பிடித்து வருவதாக கூறிச் சென்றான். பொழுது புலரும் வேளையில் அதனைத் தொடர்ந்தான். அப்போது வராகம் ஸ்வேதகிரியை அடைந்து குன்றின்மீது ஏறி தன் உருவத்தைச் சுருக்கிக் கொண்டு உச்சியில் இருந்த புற்றில் நுழைந்துவிட்டது. இவ்விடத்தில் ஏதாவது விசேஷம் அவசியம் இருக்க வேண்டும் என்று நினைத்து படையுடன் மலையை சுற்றி வந்தான் சிபி. அங்கே ஒரு குகையில் மார்க்கண்டேய முனிவர் தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு அவரை நமஸ்கரித்து நடந்த விவரத்தைக் கூறினான்.

நீர் மஹா புண்யசாலி. ஆதிவராஹமான ஸ்ரீமந் நாராயணனை கண்டாய். தவம் செய்யும் எனக்குப் புலப்படவில்லை. சீக்கிரமே அவர் எனக்கும், உனக்கும், மஹாலக்ஷ்மீக்கும் ப்ரத்யட்சமாக காட்சி தரப்போகிறார். நீர்

பசுவின் பாலை கொண்டு புற்றுக்கு திருமஞ்சனம் செய் என்றார் முனிவர். அரசனும் அவ்வாறே செய்ய உடன் பகவான் ஸ்ரீமந் நாராயணன் அங்கே ப்ரத்யட்சமாக அனைவருக்கும் காக்ஷி தந்தார். மஹாலக்ஷ்மியும் அங்கே வந்தார். உடனே பெருமாள் மஹாலக்ஷ்மியைப் பார்த்து நீ விரும்பியபடியே எனக்கு மிகவும் பிடித்தமான இந்த பூலோகத்தில் சுவேதகிரியில் உமக்கு ஸகல, ஆதிபத்யத்தையும் தந்தேன். நான் அர்ச்சாரூபமாக இங்கு இருந்து கொண்டு எல்லாருக்கும் சேவை தரப்போகிறேன் என்று வரம் அருளினார். அதன் பிறகு மார்க்கண்டேய முனிவரிடம் சிபி சக்ரவர்த்தி தான் தென்திசை நோக்கி வந்த நோக்கத்தை சொன்னார். அதற்கு முனிவர் அரசே, நீர் செய்ய உத்தேசித்த காரியம் இப்போது நடைபெறாது. பகவான் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியாக அவதாரம் செய்து அதை நிறைவேற்ற திருவுள்ளம் கொண்டுள்ளார். உமது இக்ஷ்வாகு வம்சத்தில்தான் நடக்கப் போகிறது. ஆகவே நீர் இப்போது அயோத்திக்கு திரும்பிச் செல்வீராக என்றார் முனிவர்.

சிபி மனக்குறையுடன் நின்றார். உடனே முனிவர் நமக்கு ஸேவை ஸாதித்த புண்டரீகாக்ஷனுக்கு கோவிலும் மதிலும், குடியேற்றமும் செய்வீராக. இதனால் உமக்கு ஸகலவிதமான புண்யமும் வந்துசேரும் என்றார். அதைக் கேட்ட அரசன் கோவில் கட்டி வைத்தான். மூவாயிரத்து எழுநூறு அந்தண ச்ரேஷ்டர்களை குடும்ப ஸமேதராக வரவழைத்தான். வழியில் ஒருவர் இறந்து விடவே பகவான் சிபியிடம் நீதுக்கப்பட வேண்டாம். நாமே இறந்தவருக்குப் பதிலாக இருந்து நீர் உத்தேசித்த மூவாயிரத்து எழுநூறு குடும்ப கணக்கு குறைவு ஏற்படாமல் செய்துவிட்டோம் என்று கூறினார். இதைக் கேட்டு மகிழ்ந்த சிபி அனைத்து அந்தணர்களுக்கும் க்ருஹங்கள் முதலியன நிர்மாணம் செய்து பெருமாளுடன் 3700 குடும்பப் ப்ரதிஷ்டை செய்தார். உத்ஸவங்களை நடத்தி வைத்தார். பிறகு அயோத்தி போய்ச் சேர்ந்தார்.

பகவான் அளித்த வரத்தின்படி திருவெள்ளறையில் ஸகல ஆதிபத்யமும் பங்கய செல்வி (மஹாலக்ஷ்மி)யினுடையது. ஒவ்வொரு புறப்பாட்டிற்கு முன்னும் பெருமாளுக்கு முன் தாயார் பல்லக்கில் எழுந்தருளுகிறார். உத்தராயண வாசல், தக்ஷிணாயன வாசல் என்று இரண்டு வாசல்கள் உண்டு. தை முதல் ஆனி வரை உத்தராயண வாசல் வழியாகவும், ஆடி முதல் மார்கழி வரை தக்ஷிணாயன வாசல் வழியாகவும் பெருமாளை ஸேவிக்க செல்ல வேண்டும். இரவில் நேரங் கழித்து வந்த பெருமாளைத் தாயார் ''ஏன் இவ்வளவு நேரம்'' என்று கேட்டதைக் குறிக்கும் வகையிலும் நாழி கேட்டான் வாசல் என்று ஒரு வாசலும் உண்டு. ஸ்ரீதேவி, பூதேவி, ஸூர்ய சந்திரர்கள், ஆதிசேஷன் இவர்களும் எழுந்தருளியிருப்பது இந்த ஸ்தலத்தின் தனிச் சிறப்பு.

மூலவர் : புண்டரீகாக்ஷன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : செண்பகவல்லி, பங்கயச் செல்வி, தனிக்கோவில் நாச்சியார் ஸந்நிதி உண்டு.

விமானம் : விமரலாக்ருதி விமானம்

தீர்த்தம் : மதிலுக்குள்ளேயே 7 தீர்த்தங்கள் உள்ளன. (திவ்ய, கந்த க்ஷீர புஷ்கரணிகள், குச, சக்ர, புஷ்கல, பத்ம, வராஹ, மணிகர்ணிகா தீர்த்தங்கள்)

ப்ரத்யக்ஷம் : பெரிய திருவடி, சிபி, மஹாலக்ஷ்மி, பூதேவி, மார்க்கண்டேயர், ப்ரம்மருத்ராதிகள்.

ஆராதனம் : பாஞ்சராத்ரம்

மங்களாஸாஸனம் : பெரியாழ்வார், திருமங்கையாழ்வார். மொத்தம் 24 பாசுரங்கள்.

சுபம் **தொடரும்**

ஸ்ரீ புருஷ ஸூக்த வ்யாக்யானம்

N.S.பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர் ''ஸ்ரீவைகானஸம்''.

உத்தரானுவாகம்

மந்த்ரம்-4

யோ தே[3] வேப்[4]ய : ஆதபதி / யோதேவாநாம் புரோஹித : / பூர்வோ யோ தேவேப்யோ ஜாத:/ நமோ ருசாய ப்ராஹ்மயே!

அர்த்தம்: ''எந்த பகவான் நித்யஸூரிகளான தேவர்களுக்காக ப்ரகாசிக்கின்றாரோ, எவர் நித்யஸூரிகளுக்கு அனாதிகாலமாக ஹிதத்தை செய்பவரோ, எந்த பரமபுருஷன் தேவர்க்கெல்லாம் முதல்வராயிருக்கின்றாரோ, ஜ்வலிக்கின்றவரும் பரப்ரஹ்மமுமான அந்த பரமபுருஷனுக்கு நமஸ்காரம்'' என வேதம் பரமபுருஷனை வணங்குகிறது.

வ்யாக்யானம்: இம்மந்த்ரம், எம்பெருமான், நித்யஸூரிகளுக்கெல்லாம் தலைவனாயிருப்பதை புகழ்கிறது. 'அயர்வறும் அமரர்கள் அதிபதி என்று திருவாய்மொழி (1-1-1) அயர்வறுமமரர்கள் என்றால் அநந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகளே யோ தேவேப்ய ஆதபதி - ''எந்த புருஷோத்தமன் நித்யஸூரிகளுக்காக திவ்ய மங்கள தேஹத்துடனும் ஸமஸ்தமான கல்யாண குணங்களுடனும் ப்ரகாசிக்கிறாரோ'' என்று சொல்லப்படுகிறது எம்பெருமான் ஜ்யோதிர்கணேச்வரனல்லவா! (ஸஹஸ்ரநாமம் 625) திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார் (திருவாய்மொழி).

யோ தேவாநாம் புரோஹித: ''எந்த பரமபுருஷன் நித்யஸூரிகளுக்காக அனாதி காலமாக (காலக்கணக்கில் பகவான் அடங்காதவனாயிற்றே!) ஹிதத்தை செய்பவரோ.'' ஸதா ஸர்வகாலமும் எம்பெருமானை சூழ்ந்திருந்து ஏத்துவதாகிற கைங்கர்யஸ்ரீயை நித்யஸூரிகள் பெற்றுள்ளனர். பரமானந்தமான இக்கைங்கர்யமே நித்யஸூரிகளுக்கு ''உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை'' என பரமபோக்யமாக உள்ளது. நித்யஸூரிகள் பகவத் கைங்கர்யம் தவிர வேறெதுவும் வேண்டாதவர்களாய் உள்ளனர் இவ்வுலகிலுள்ள போகங்களெல்லாம் ஹிதமா? அல்ல பகவத்கைங்கர்யமே ஹிதம் - அந்த கைங்கர்யமாகிற ஹிதத்தை நித்யஸூரிகளுக்கு அருளிய பரமபுருஷனை அழைக்கிறது வேதம்.

பூர்வோ... ஜாத: ''எந்த பகவான் நித்யஸூரிகளுக்கு முதல்வராயுள்ளாரோ.'' ''நமஸ்தேஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ'' என்றது நம் ஸ்ரீவைகானஸ ப்ரார்த்தனா ஸூக்தம்.

''திருவுக்கும் திருவாகிய செல்வா! தெய்வத்துக்கரசே'' என திருமங்கையாழ்வார் திருமொழியில் அருளிச்செய்துள்ளார். 'வானோர் பெருமான் மாமாயன் வைகுந்தன் எம்பெருமான்'' என அருளினார் நம்மாழ்வார்.

நமோ... ப்ராஹ்மயே- ''திவ்யமங்கள அப்ராக்ருதமான (இயற்கையைக் கடந்த) விக்ரஹத்துடன் ப்ரகாசிக்கிற பரப்ரஹ்மமான ஸ்ரீமந்நாராயணனுக்கு நமஸ்காரம்'' ''ருசாய'' என்றால் ப்ரகாசிப்பவனுக்கு எனப் பொருள்.

''ஸுருசி:''- அழகாக ப்ரகாசிப்பவன் என விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலும் காண்கிறோம். ''நிலவும் சுடர் சூழொளிமூர்த்தி'' ஒண் சுடரே

என்றும் ஒளிமணிவண்ணன் என்றும் திருவாய் மொழி. ப்ரஹ்மம் என்றால் ஸ்ரீமந்நாராயணனே.

'ப்ருஹத்வாத் ப்ரஹ்மணத்வாச்ச பரப்ரஹ்மேதி கீர்த்யதே'' - பெரிதாயுள்ளதாலும், பிறவற்றை பெரிதாக்க வல்லமையாலும் பரப்ரஹ்மம் என்றழைக்கப்படுகிறார். 'எங்குமுளன் கண்ணன்'' ''ஆற்றல் மிக்கான் பெரிய பரஞ்சோதி புக்க அரி'' (திருவாய்மொழி)

''அடியேனும் அடியேன் செய்கின்ற பகவத் கைங்கர்யமும், அதனால் உண்டாகும் ப்ரஹ்மானந்தமும் என்னுடையதல்ல; அனைத்தும் பகவானுடையதே என நம: எனும் பதத்தினால் சொல்லப்படுகின்றது. ''நமவென்னலாம் கடமை'' (நம்மாழ்வார்) ''நமோ நாராயணாயவென்று பல்லாண்டும் பரமாத்மனை சூழ்ந்திருந்து ஏத்துவர். (பெரியாழ்வார்)

இப்பேற்பட்ட மஹாமஹிமை வாய்ந்த சொல்லான ''நம:'' என்னும் பதத்திற்கு நேர்த்தமிழ்ச்சொல் எதுவும் பொருத்தமாக இல்லை. அதனால்தான் நமோ என்று ஆழ்வார்கள், நேரடியாகவே உபயோகப் படுத்தியுள்ளார்கள் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

எம்பெருமானிடம் நித்யம் ''நம:'' என்று பன்முறை திருத்துழாய் சேர்த்து அர்ச்சிக்கும் பேறு பெற்ற நாம் மிகவும் பாக்யம் செய்தவர் என்றால் அது மிகையாகாது.

ஆகவே, ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்.''

ஸர்வே ஜனாஸ்ஸுகிநோ பவந்து ॥ (தொடரும்)

வாசகர் கடிதம்

நம் குலஸ்வாமிகளின் அன்பையும், ஆதரவையும் பெற்று ''ஸ்ரீவைகானஸம்'' எனும் அமுதசுரபியை வழங்கும் தங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். என் போன்றோரின் திறனை வளர்க்க தாங்கள் வெளியிடும் குறுக்கெழுத்துப் போட்டி மிகவும் அத்புதமாக அமைந்துள்ளது. தொடர்ந்து வெளியிட்டு அடியேன் போன்றோரை ஊக்குவிக்க வேணும்.

குமாரி.R. ஸ்ரீமதி, வாணாதிராஜபுரம்

ஸ்ரீவைகானஸர்க்கு தேவையான பல ஸத்விஷயங்கள் நம் நூலில் வெளிவருகின்றன. ஸ்ரீபுருஷஸூக்த வ்யாக்யானம், கல்பஸூத்ரம் பற்றிய கட்டுரைகள் சிறப்பாக அமைந்துள்ளன. ஸ்ராவணோபாகர்மா, தர்ஸதர்ப்பணம், ஸந்த்யாவந்தனம் புத்தகமாய் கிடைக்க வேணும்.

ஸ்ரீ.உ.வே. N.P. பக்ஷிராஜ பட்டாச்சார், நாச்சியார்கோவில்.

ஸ்ரீவைகானஸ குறள் மொழிகள்

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி விகனஸன்
முதற்றே அர்ச்சை

கற்கக் கசடற வைகானஸம் கற்றபின்
நிற்க அதற்குத் தக

அர்ச்சையால் வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
சர்ச்சைதான்; சங்கடந்தான்

அர்ச்சை என்பது உயிர் நிலை மற்று ஏன்?
சர்ச்சைக்குரிய தொழில்

மணமாலை

மணமகன் தேவை

F-83. காஸ்யபம், ரோஹிணி, 12-10-76, 24 வயது 5 அடி 8 வது தேவைப்படும் வரன் அர்ச்சகர், முகவரி, ஸ்ரீ S. அனந்தபட்டாச்சார், C/o K. ஸ்ரீநிவாச பட்டாச்சார், சின்னவரிக்கம் P.O. துத்திப்பட்டு (Via) ஆம்பூர் - 635811

F-84. கௌசிகம், பூராடம், 5.12.75, 25 வயது, S.S.L.C. 152 cm. தேவைப் படும் வரன் பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ . P. ஸ்ரீராம பட்டாச்சார், 24/30, பிராமணத் தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை Dt. 604 408

F-85. காஸ்யபம், மகம், 11.12.68, 31 வயது, M.A., தனியார்துறை, தேவைப் படும் வரன் அர்ச்சகர்/பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீமதி விஜயா வேணுகோபாலன், அக்ரஹாரம், ஆங்கரை, திருச்சி Dt.

F-86. காஸ்யபம், சுவாதி, 20.10.71, 29 வயது, M.A., தனியார்துறை, தேவைப் படும் வரன் அர்ச்சகர்/பணியில் உள்ளவர். முகவரி. A.R.S. வாசுதேவ பட்டாச்சார், சன்னிதி தெரு, திருக்கோஷ்டியூர். Pin.630 210. Ph: 61187.

F-87 கௌதமம் பூசம் (12.8.63) B.A. 5' 3'' தனியார் துறை சம்பளம் ரூ.750 தேவைப்படும் வரன் அர்ச்சகர் / பணியில் உள்ளவர் முகவரி ஸ்ரீ A.V. இராகவாச்சாரியலு 2-59 Old BajanaiKoil Street, Nagari post, Chittoor Dt. 517590 A.P.

F-88 கௌதமம் ஆயில்யம் 29 வயது S.S.L.C. தனியார்துறை சம்பளம் ரூ.2000. தேவைப்படும் வரன் பணியில் உள்ளவர். முகவரி ஸ்ரீ T. ஸ்ரீனிவாச பட்டாச்சார், C/o. N.S. ராமபட்டர், 3, பெருமாள் கோவில் தெரு, தல்லாகுளம், மதுரை-625 002. போன்: (0452) 523617

F-89 கௌதமம் பரணி 29 வயது 10 வது தேவைப்படும் வரன் அர்ச்சகர்/ பணியில் உள்ளவர். முகவரி: ஸ்ரீ P.S. துரைசாமி பட்டாச்சார், பெரமூர் போஸ்ட். அய்யம்பாளையம். முசிறி தாலுகா. 621 202.

*F-59. காஸ்யபம், பூராடம், 19-10-77, 22 வயது, 5'2' B.Com, D.C.A. தேவைப்படும்வரன் பணியில் உள்ளவர் முகவரி, ஸ்ரீ S. சந்தானம், No. 88, அக்ரஹாரம் தெரு, விட்டலூர், திருநீலக்குடி P.Ol. கும்பகோணம் TLK, தஞ்சாவூர். Dt. - 612108

மணமகள் தேவை

M-58, காஸ்யபம், சதயம், 22-2-74, 26 வயது, 5' 5'' B.Com, Type Both./ தனியார்துறை, சம்பளம் ரூ. 5000 தேவைப்படும் வதூ - படித்தபணிக்கு செல்ல தகுதியான பெண், முகவரி, ஸ்ரீ P.S. சக்ரவர்த்திப்பட்டாச்சார், 3/ A, வடக்குத்தெரு, ஒப்பிலியப்பன் கோவில், திருநாகேஸ்வரம், 612204

M-59. கௌதமம், அவிட்டம், 17-7-73, 27 வயது, +2, அர்ச்சகர் சம்பளம் ரூ. 1000/- தேவைப்படும் வதூ குடும்பத்திற்கேற்ற பெண் முகவரி. S. ராமமூர்த்திபட்டாச்சார், 1/16, அக்ரஹாரம், வரகூர். P.O. நடுக்காவேரி Via தஞ்சாவூர்.

M-60. கௌசிகம், சுவாதி, 25.4.75, 25 வயது. S.S.L.C. 5 அடி, அர்ச்சகர், சம்பளம் ரூ.3000/- தேவைப்படும் வதூ குடும்பத்திற்கேற்ற பெண் (செவ்வாய் தோஷம் உள்ள பெண்) முகவரி. ஸ்ரீ S. துரைராஜன் C/o.K. வெங்கட்ராமன் 7/4, ஜோதிராமலிங்கம் 1 வது தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

M-61. காஸ்யபம், மகம், 7.5.68, 31 வயது, 5'4'' Dip. in Hotel Management. Working in 5 Star Hotel at Muscut சம்பளம் ரூ.40,000/- தேவைப்படும் வதூ. குடும்பத்திற்கேற்ற பட்டதாரியான பெண். முகவரி. ஸ்ரீ V. கோபால கிருஷ்ணன், 3-C, மணிமேகலை தெரு, ராஜாஜி நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை-600 043, போன். 044-241 3211.

M-62 ஆத்ரேயம் உத்தரட்டாதி 2.2.73, 27 வயது. 5'6'' 10 வது. அர்ச்சகர் சம்பளம் ரூ.1500/- தேவைப்படும் வதூ குடும்பப்பாங்கான பெண். முகவரி: ஸ்ரீ R. வெங்கட்ராம பட்டாச்சார், 58, பழமார்நேரி அக்ரஹாரம், திருக்காட்டுப்பள்ளி. via தஞ்சை Dt. 613 104.

M-63 கௌதமம், பூராடம், 24.12.65 35 வயது, 165 செ.மீ. M Com., B.Ed., தனியார்துறை சம்பளம் ரூ.3500. தேவைப்படும் வதூ பட்டதாரியான பெண். முகவரி ஸ்ரீ A.V. இராகவாச்சாரியலு, 2-59, Old Bajanai Koil St, Nagari-Chittoor Dt. 517 590.

M-64 கௌதமம் சதயம் 1.1.1971 வயது 29. (B.Com) 5'4'' மத்திய அரசுதுறை சம்பளம் ரூ.4500. தேவைப்படும் வதூ படித்த அழகிய குடும்பப்பாங்கான பெண். முகவரி. ஸ்ரீ R. ஸ்ரீனிவாச பட்டாச்சார், 1/23, கீழகல்கண்டார் கோட்டை, திருச்சி Dt. 620 011. Phone: (0431) 444318

M-65 பாரத்வாஜம், திருவாதிரை 1.1.72 வயது 28. 160 c m. M.A. மாநில அரசுதுறை (தற்காலிகப் பணி) சம்பளம் ரூ.1500 தேவைப்படும் வதூ பட்டதாரியான பெண். முகவரி ஸ்ரீ D.S. வீரராகவ பட்டாச்சார், 62/53, மேலப்புதுத்தெரு, சிதம்பரம், கடலூர் Dt. 608 001. Phone: (04144) 30787

M 66 பார்க்கவம் திருவோணம் 24.10.74 26 வயது 167 c.m. B.Sc., தனியார் துறை சம்பளம் ரூ.15000. தேவைப்படும் வதூ படித்த பட்டதாரியான பெண். முகவரி. ஸ்ரீ S. பார்த்தசாரதி பட்டாச்சார், 11, (Rockfort) நகர், இந்தியன் வங்கி காலனி, திருச்சி Dt. 620 021. Phone: (0431)351110

* M-49. பாரத்வாஜம், மூலம், 6.6.74, B.Sc., M.C.A. 5'4" தனியார்துறை சம்பளம் ரூ.30,000/- தேவைப்படும் வதூ. பட்டதாரியான பெண். முகவரி. ஸ்ரீ S. சௌமித்ரன், 5, 30 வது தெரு, சங்கர் நகர், பம்மல், சென்னை-600 075. போன். 044-2415105.

குறிப்பு: இந்த பகுதியில் ஏற்கனவே வெளியிடப்பட்ட விளம்பரங்கள் குலஸ்வாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மூன்று மாதத்திற்கு வெளியிட உத்தேசித்துள்ளோம் தேவைப்படுவோர் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதில் பழைய Sl.No. குறிப்பிட்டு அனுப்பவும்.

★ இக் குறியீடு செய்யப்பட்ட விளம்பரம் ஏற்கனவே வெளியானவை.

ஸ்ரீவைகானஸமும் - ஆண்டாளும்

இலத்தூர் வாசுதேவ கோவிந்தராஜ பட்டாசார், ஜெய்ஹிந்த்புரம், மதுரை

ஸ்ரீவைகானஸ சாஸ்திரம் மிகவும் தொன்மையானது ஸூத்ர ப்ரவர்த்தகர்களான போதாயனர் - ஆபஸ்தம்பர் மற்றும் கல்பங்களை எழுதிய ரிஷிகள். இதிஹாஸ புராணங்கள் அருளியவர்கள் ஆகிய அனைவரும் ஸ்ரீவைகானஸ சாஸ்திரங்களி லிருந்து பல விஷயங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆழ்வார்களும் ஸ்ரீவைகானஸத்தையே பிரமாணமாகக் கொண்டு பாடியுள்ளனர். ஆண்டாளும் மற்ற ஆழ்வார்களும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்தைப் பாடியிருப்பதை ஒருசில எடுத்துக்காட்டுகளில் காண்போம்.

பெருமாள் அவதாரங்கள் செய்த காலங்களிலும் ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்தையே அனுஷ்டிக்கிறார். வாமனாவதாரத்தில் பெருமாள் உபனயனம் கொண்டருளுகிறார். ஐந்தாவது வயதில் உபனயனம் செய்யவேண்டும் என்று ஸ்ரீவைகானஸ ஸூத்ரம் கூறுகிறது.

''அத கர்பாதா நாதி வர்ஷே பஞ்சமே ப்ரம்ம வர்ச்சஸகாமம் உபநயீத ॥

(ஸ்ரீவைகானஸ க்ருஹ்யசூத்ரம்)

அடுத்து ஸ்ரீராமாவதாரத்தில் வனவாச வ்ரதத்தை மேற்கொள்கிறார் பெருமாள். அப்பொழுது ''ஸ்ரீவிகனஸரின் சாஸ்திரப்படி லக்ஷ்மணனுடன் சேர்ந்து (குஹனுடைய உதவியுடன்) வனவாசத்தை மேற்கொண்டார்'' என்பது ஸ்ரீவால்மீகி முனிவரின் வாக்கு

''ததோவைகானஸம் மார்கம் ஆஸ்தித: ஸஹலக்ஷ்மண:
வ்ரதமாதிஷ்டவாந் ராம: ஸஹாயம் குஹமப்ரவீத்''

வால்மீகி இராமாயணம் - அயோ-காண்-52ஸர்-70வது சுலோகம்

ஸ்ரீகிருஷ்ணவதாரத்தில் கண்ணனுக்கு (பிறந்த பன்னிரண்டாம் நாளன்று) உத்தானம் என்ற சடங்கைச் செய்தார்கள். பெரியாழ்வார் இதனை

''பத்துநாளும் கடந்த இரண்டா நாள் - எத்திசையும் சுயமரம் கோடித்து
மத்தமாலை தாங்கிய மைந்தனுக்கு - உத்தானம் செய்துகந்தனர் ஆயரே.

(பெரியாழ்வார் திருமொழி)

இதுவும் ஸ்ரீவைகானஸ க்ருஹ்யஸூத்ரத்தில் 7வது ஸம்ஸ்காரமாகக் கூறப்பட்டுள்ளது

''அ த^{2} த^{3} சமே த்வாதசே வாஹனி பவத்யுத்தானம்''

(குழந்தை பிறந்த பத்தாவது அல்லது பனிரண்டாம் நாள் உத்தானம் என்பதைச் செய்ய வேண்டும்'' என்பது இதன் பொருள்.)

ஆண்டாள் பெருமாள் தன்னை மணந்து கொண்டதாகக் கனவு கண்டாள். அக்கனவின்படியே நேரிலும் ஸ்ரீரங்க மன்னார் வந்தார். வைதீக முறை தவறாமல் விவாஹம் செய்து கொண்டார்.

வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து
காய்சின மாகளிறன்னான் என் கைப்பற்றி
தீவலஞ் செய்யக் கனாக் கண்டேன் தோழீநான்

என்று பாணிக்ரஹணம் செய்ததைச் சொல்கிறார் ஆண்டாள்.

வைதிகமான பெரியோர்களான ஆசார்யர்கள் மந்திரங்களைக் கூறியவாறே அக்னியைச்சுற்றி (பரிஸ்தரணம் எனப்படும்) ''பசுமையான தர்பங்களையும் பரிதி ஸமித்துக்களையும் வைத்தனர் அந்த அக்னியை என் கையைப்பற்றிக் கொண்டு (பாணிக்ரஹணம் செய்துகொண்டு) பெருமாள் வலம்வந்தார்.''

இதில் ஸ்ரீவைகானஸஸூத்ரம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

1. அக்னியைச்சுற்றி பரிஸ்தரண தர்பம், கூர்ச்சம், பரிதிசமித், இவற்றை ''மயிதேவா:'' முதலாக அந்தந்த மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு வைக்க வேண்டும் என்று கூறுகிறது ஸ்ரீவைகானஸ க்ருஹ்ய சூத்ரம். மந்திரத்தால் பாசிலை நாணல் படுத்து பரிதி வைத்து'' என்ற வரி இதனைத்தான் விளக்குகிறது.

2. மேலும் ஆசார்யர்கள்தான் பரிஸ்தரண - பரிதிகளை மந்திரங்கள் சொல்லி வைத்தார்கள் என்பதற்கு ஆசார்யர் அக்னிமுகம் எனப்படும் ஆகார ஹோமம் செய்தார் என்று பொருள்கொள்ள வேண்டும். திருமணத்தில் ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்தில் மட்டுமே ஆசார்யரே அக்னி முகம் (ஆகாரஹோமம்) செய்ய வேண்டும்'' என்று விதிக்கப்பட்டுள்ளது.

''கு^{3}ருணா அக்னி முகே^{2} க்ருதே''

ஸ்ரீசீதாராம விவாஹத்திலும் வசிஷ்டர்தான் அக்னிமுகம் செய்ததாக வால்மீகிரிஷி கூறுகிறார்.

''ஜுஹாவக்னௌ மஹா தேஜா வஸிஷ்டோ பகவான் ரிஷி: (ஸ்ரீவால்மீகி ராமாயணம் பாலகாண்டம்)

எனவே பகவானும் அர்ச்சாவதாரத்திலும் - அவதாரங்களிலும் ஸ்ரீவைகானஸ சாஸ்திரத்தையே அனுஷ்டிக்கிறார். எனவே தான் அடியார்களாகிய ஆழவார்களும் பகவானைப பின்பற்றி ஸ்ரீவைகானஸத்தையே பேசுகிறார்கள்.

சுபம்

மணிஓசை - 6

அவருக்கென்னடா குறைச்சல்! பெரியபிள்ளை திருச்சியில் ஒரு கம்பெனியில் டைபிஸ்ட்; வைதிகசிரத்தை; தினமும் உள்ளூர் திருவாராதனம் அவர்தான். அடுத்தவர் தமிழகத்திலேயே சிறந்த தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் சம்ஸ்க்ருத பண்டிதர்; பல புத்தகங்களுக்கு தொகுப்பாசிரியர்; (மொழிப் பெயர்ப்பாளரும்கூட) கடைசி பிள்ளையோ மயிலை விவேகானந்தா கல்லூரியில் சம்ஸ்கிருதப் பேராசிரியர் வைகானஸ நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்தவர்; அனைவரும் வைதிகசிரத்தை கொண்டவர்கள். ஒரே மாப்பிள்ளையும் திருமலையில் அர்ச்சகர்!

ஆமூர் கோபாலகிருஷ்ணபட்டாச்சாரியரின் திருக்குமாரர் ஸ்ரீஉவே சங்கேந்தி A.G. ஸ்ரீனிவாஸபட்டாச்சார் எப்போதுமே திருமுகத்தில் புன்னகையை ஏந்தியிருப்பவர். சௌலப்யர். ஆசார்யர்சேலம் ஸ்ரீவைகானஸ ஞானதீபம் Dr. சந்தான பட்டாச்சாரியர். வேத அத்யயனம் செய்து கொண்டே ஸ்ரீரங்கம் ராமர் ஸந்நிதி கைங்கர்யம் செய்த இந்தஸ்வாமிகுணசீலம் பரம்பரை அர்ச்சகஸ்தானிகமிராசுதாரர். TTD-யில் பூர்வபாகம் முடித்த இந்த ஸ்வாமி ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ர பாஸ்கரர், ஸ்ரீவைகானஸ ஆசிரியர் (திருச்சி இந்து அறநிலையத் துறை) போன்ற கௌரவங்கள் அமையப்பெற்றவர்.

தமிழ்நாடு முழுதும் உள்ள திவ்ய தேசங்களில் ஸம்புரோக்ஷணம், ப்ரம்மோத்ஸவங்கள், பவித்ரோத்ஸவம் அன்வயித்து சிறப்புற சேவை செய்து வருகிறார் இந்த ஸ்வாமி.

நூற்றுக்கும் மேற்பட்ட சுதர்ஸந ஹோமங்கள் செய்துள்ள இவருக்கு பிரத்யக்ஷ தெய்வமும் ஸ்ரீசுதர்ஸநரே!

தைவீகத்தில் மட்டுமல்லாது நமது குலஸ்வாமிகளின் கிருஹ்யக்ருத்யங்களிலும் ஆசார்யனாக இருந்து அருளிவருகிறார். சங்கேந்தி ஸந்நிதியை சிறப்பாக முன்னேற்றி வருகிறார் கடந்த 35 ஆண்டுகளாக.

இந்த ஸ்வாமியின் வாசஸ்தலம் சங்கேந்தி. உபாஸநாமூர்த்தி ஸ்ரீசக்கரத்தாழ்வார். சுதர்ஸந பாஞ்சஜன்யர்களின் அனுக்ரஹம் பெற்ற இந்த ஸ்வாமி பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களையும் குறைகளையும் தமது மாந்த்ரீக சக்தியினால் போக்கடித்து வருகிறார்.

ஆசிரமம் போலுள்ள இவரது திருமாளிகையும் ஒரு ஸந்நிதி போலவே உள்ளது குறிப்பிடத்தக்கது. சங்கேந்தி எம்பெருமானின் திருப்பெயரையே பெற்றுள்ள இந்த ஸ்வாமிக்குப் பல்லாண்டு பாடுவது ஸ்ரீவைகானஸத்துக்கே பல்லாண்டு பாடுவதாகும் என்பது மிகையில்லை.

''விகனஸப்ரியன்'' (தொடரும்)

அம்மாமிக்கு அன்புடன் - 3

ஸ்ரீ.கோ. ஸ்வர்ணஸரோவர்

ஆஹாரம் சுத்தமாக இருந்தால் ஸாத்வீகம் ஏற்படுகிறது புலன் இன்பங்களையே நாடாமல் தெய்வீட விஷயத்தில் மனம் திரும்பவேண்டு மானால் நாம் சாப்பிடும் உணவு ஸாத்வீகமானதாக அமையவேண்டும்.

விஷயாவிநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹினஃ

விஷய ஸுகங்களில் மனத்தை ஈடுபடுத்தும் ஆஹாரங்களைத் தவிர்க்கவேண்டும்.

ப்ராணாயாமம் முறையாகச் செய்து வருபவர்களுக்கு காம இச்சை அதிகமாக ஏற்படாது. வைதீக தர்மம் நிலைநிற்க வேண்டுமானால் ஆஹார சுத்தியும் விகார மடையாத மனநிலையும் தேவை.

கருத்தடை கர்ப்பச்சிதைவு முதலியவை அதர்மங்களாகும். இதில் ஈடுபடுபவர்களுக்கு மேல் வரும் ஜன்மங்களில் குழந்தைபாக்கியமே ஏற்படாது. பகவத்க்ருபையால்தான் ஒரு குழந்தை உண்டாகிறது. அதை கர்ப்பத்திலேயே சிதைப்பது பெரும்பாவமாகும். சட்டம் அனுமதித்தாலும் கருச்சிதைவு செய்யக்கூடாது.

குழந்தைக்குத் தாய்ப்பால்தான் சிறந்தஉணவு. அது பகவானால் அருளப்பட்டது. தாய்ப்பால் கொடுப்பதைத் தவிர்த்து புட்டிப்பால் புகட்டக்கூடாது. தாய்ப்பால் கொடுக்கப்பட்ட சிசு தாயிடம் பாசத்துடன் இருக்கும். புட்டிப்பால் சாப்பிட்ட குழந்தை அவ்வாறு இருக்காது. பிற்காலத்தில் குழந்தைகள் தாய் தந்தையரிடம் பாசத்துடன் பரிவுகாட்ட வேண்டுமானால் தாய்ப்பால் கொடுத்து வளர்க்கவேண்டும். குழந்தையை அணைத்துக்கொண்டு படுக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு பகவத் சம்பந்தமான பெயர்களையே வைக்க வேண்டும். மிகநீண்ட பெயர்களை வைக்க வேண்டாம். புஷ்பங்களின் பெயர்களையும் நதிகளின் பெயர்களையும் வைக்கவேண்டாம். புஷ்பங்கள் நதிகள் நக்ஷத்ரங்கள் இவைகளின் பெயர் கொண்டுள்ள பெண்களை திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று வைகானஸ சாஸ்திரம் கூறுகிறது.

சின்ன குழந்தைகளாய் இருக்கும்போதே பிறருக்குக் கொடுத்து மகிழும்படி பழக்குங்கள். பழம் புஷ்பம் முதலியவை வாங்கினால் குழந்தையிடம் கொடுத்து மற்றவர்களுக்குகொடுக்கச் செய்யுங்கள். குழந்தைகள் கேள்விகேட்டால் பொறுமையாக விளக்கம் சொல்லுங்கள். கட்டுப்பாட்டுடனும் அன்புடனும் வளர்க்கவேண்டும். உங்கள் குழந்தை உங்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளவேண்டுமானால் நீங்கள் பெரியோர்களிடம் அன்புடனும் பணிவுடனும் நடந்துகொள்ளுங்கள். குழந்தைகள் பார்ப்பதைக் கொண்டு பாடம் கற்கின்றார்கள். உபதேசத்தைவிட முன்மாதிரியாய் இருப்பதே முக்கியம்.

நமது ஆசாரியரைப்பற்றி உங்கள் மகனுக்குக் கூறுங்கள்.
ஸ்ரீவிகநஸர் நமது ஆசாரியர்

ஸ்ரீமந்நாராயணனும் ஸ்ரீமகாலக்ஷ்மியுமே நமது ஆசாரியரின் தகப்பனாரும் தாயாருமாவர். நமது ஆசாரியர் பகவானை ஆராதிக்கும் வழிமுறைகளை போதித்திருக்கிறார். ப்ருகு, மரீசி, அத்ரி காச்யபர் முதலானோர் நமது ஆசாரியரின் சிஷ்யர்கள் கலைமான் நமது

ஆசாரியரின வாஹனம். நமது ஆசாரியர் த்ரிதண்டம் (முக்கோல்) ஏந்தியவர் சந்நியாசிகள் திரிண்டம் தரிக்கவேண்டும் என்று தனது ஸித்திரத்தில் கூறியுள்ளார். ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்பதை நமது ஆசாரியர் உபதேசித்திருக்கிறார். ஸ்ரீமந்நாராயணனைத் தவிர மற்ற தேவர்கள் தாழ்வானவர்களே. அவர்களைப்பரம்பொருள் என்று நாம் வணங்கக்கூடாது. திருமண் ஸ்ரீசூர்ணம் எப்போதும் அணியவேண்டும். திருமண் பெருமாளையும் ஸ்ரீசூர்ணம் ஸ்ரீலக்ஷ்மியையும் குறிக்கிறது. ஸ்ரீசூர்ணம் இல்லாமல் திருமண் அணியக்கூடாது. திருமண் இல்லாமல் ஸ்ரீசூர்ணம் மட்டும் அணியக் கூடாது. சீதையை வேண்டா மென்று ராமனை விரும்பிய சூர்பநகை மூக்கறுபட்டாள். ராமனை வேண்டாமென்று சீதையை விரும்பிய ராவணன் போரிட்டு மடிந்தான். உங்கள் மகனை லுங்கி அணிய அநுமதிக்காதீர்கள். ராமாயணம் போன்ற கதைகளைச் சிறுவயது முதலே குழந்தைகளுக்குச் சொல்லுங்கள், ஸ்ரீராமன் ரகுநாதன், தாசரதி என்று பெயர் வைத்தால் மட்டும் போதாது. அந்த பெயருக்கு ரிய ஸ்ரீராமனின் குணாதிசயங்களை பிள்ளைகளுக்கு சொல்லவேண்டும். தந்தை சொல்மிக்கமந்திரமில்லை. தகப்பனார் சொன்னார் என்பதற்காக 14 வருடங்கள் காட்டுக்குப் போனார் ஸ்ரீராமன். அப்பாவின் பேச்சைக் கேட்காமல் அடம்பிடிக்கும் பிள்ளைக்கு ஸ்ரீராமனின் கதையைச் சொல்லுங்கள். அப்பாவின் பேச்சை கேட்கவேண்டாம் என்று யார் சொன்னாலும் அதை ஏற்ககூடாது. தசரதன் வயதானவன். அவன் அந்தப்புரத்தில் சொன்ன வார்த்தைக் காக காடுபுகவேண்டாம் என்று ஜாபாலி என்ற முனிவரே சொன்னார் அதற்கு ராமன்

அஹம்ஹி வசனாத் ராஜ்ஞஃ பதேய மபி பாவகே।
பக்ஷயேயம் விஷம் தீக்ஷ்ணம் பதேயமபி சார்ணவே ॥

அப்பா சொல்லிவிட்டால் நான் நெருப்பில் புகுவேன், கொடிய விஷத்தையும் குடிப்பேன் மேலும் கடலிலும் விழுவேன் அப்பா சொல்லை மீறமாட்டேன் என்கிறார்.

அப்படிப்பட்ட ஸ்ரீராமனின் பெயரைவைத்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள் அப்பாசொல்லைத் தட்டாமல் கேட்கவேண்டும். அப்பா அம்மா இருவரையும் தினமும் ஸேவிக்கக்கற்றுத் தரவேண்டும். பிள்ளை அப்பாவை மதிக்க வேண்டுமானால் அம்மா அவரை கௌரவமாக நடத்தவேண்டும். மாறாக பிள்ளையிடம்

''உன் அப்பாவுக்கு ஒன்றும் தெரியாது, அது ஒருமக்கு நீ படித்து விட்டு பெரிய வேலைக்குப் போகவேண்டும் மந்திரம் தந்திரமெல்லாம் உனக்கு வேண்டாம்''

என்றெல்லாம் விளையாட்டுக்குக் கூட பேசாதீர்கள். அப்பா பேச்சை கேட்கவில்லையானால் ராமன் ரகுநாதன் தாசரதி ராகவன் போன்ற பெயர்கள் பொருந்தாத பொருளில்லாத பெயர்களாகி விடும். பின்னர் மிஸ்டர் ஸ்டோன் மிஸ்டர் பாக்ஸ் மிஸ்டர் டைகர் என்று மாற்றிப் பெயரிடவேண்டிவரும். அதனால் அப்பா சொல்படி நட. அப்பாவை வணங்கு அப்பாவுக்குப் பணிவிடை செய் என்று பிள்ளைகளுக்கு மீண்டும் மீண்டும் சளைக்காமல் சொல்லவேண்டும். பெண்களுக்கும் அடக்கமுடைமை பற்றிச் சொல்லவேண்டும். பிள்ளைக்கு 7 வது வயதில் உபனயனம் செய்து சந்தியாவந்தனம் 3 வேளையும் செய்யத்தூண்ட வேண்டும்.

சுபம் தொடரும்

வடமொழி அகராதி - 6

அவலம்ப[3]ः அவலம்ப நம்	-	பிடிப்பு, ஆதாரம்
அவலோக நம்	-	பார்த்தல், பார்வையில் நிறுத்திவைத்தல், பார்வை, சோதித்துப் பார்த்தல்
அவஶ	-	சுதந்திரமான, பிறருக்குக் கீழ்ப்படாத, பிறர் வசப்படாத, புலன்களுக்குக்கட்டுப்பட்ட, சக்தியற்ற.
அவஶ்யம்	-	அவஸ்யமான, நிச்சயமாக, தவறாத
அவஶிஷ்ட	-	மீதமான, பாக்கியான, தேவைக்கு அதிகமான
அவஸரः	-	ஸமயம், ஸந்தர்ப்பம், ஸ்தானம், ஓய்வு, மழை பொழிதல், இரகஸ்யமாகக் கலந்தாலோசித்தல்
அவஸாத[3]ः	-	மூர்ச்சையடைதல், அழிவு, நஷ்டம், களைப்பு, துக்கம், தோல்வி
அவஸாநம்	-	நிறுத்துதல், முடித்தல், வியாதி, எல்லை, இளைப் பாருமிடம்
அவஸ்தா[2]	-	நிலை, ஸ்திதி, கால அளவு, உருவம், நீதிமன்றத்துக்குப் போய் இருத்தல்
அவாந்தர	-	கலந்த, முக்யமில்லாத, தொடர்பில்லாத, அதிகப்படியான
அவாப்	-	அடைய, பெற, சென்றடைய, நுழைய
அவாப்திः	-	அடைதல், கிடைத்தல்
அவிः	-	காற்று, கம்பளி, சால்வை, எஜமானன், ஸூர்யன்
அவிகல	-	குற்றம், குறையில்லாத, பூர்த்தியான, முறையான
அவிச்சி[3]த்ர	-	தொடர்ந்த, பிரிக்கப்படாத
அவித்[3]யா	-	அறியாமை, அறிவின்மை
அவிநய	-	அடக்கமில்லாத, நற்பழக்கமில்லாத, கர்வமுள்ள
அவிபக்த	-	பிரிக்கப்படாத, பாகம் போடப்படாத
அவிரல	-	தடிப்பான, அடர்த்தியான, நெருக்கமான, பெரிய, தொடர்ந்த
அவிவேக	-	தீர்வுகாணும் புத்தியில்லாத, ஆலோசனை செய்யாத
அவேக்ஷணம்	-	காவல் புரிதல், கவனம், எண்ணமிடுதல்
அவ்யக்த	-	தெளிவற்ற, கண்ணிற்குப் புலப்படாத, வளர்ச்சி பெறாத, தெரியாத
அவ்யக்தः	-	இன்னும் உருப்பெறாத மூல வஸ்து, விஷ்ணு, முட்டாள், காமன்
அவ்யவஸ்தி[2]த	-	சட்டம், திடபுத்தியில்லாத, விதிகளுக்குக்கட்டுப்படாத
அஶ்	-	வியாபிக்க, சென்றடைய
அஶநம்	-	பரவுதல், ஊடுருவல், நுழைதல், சாப்பாடு, உருசித்தல்
அஶரீர	-	பரம்பொருள், ப்ரம்மம், துறவி
அஶிரः	-	நெருப்பு, ஸூர்யன், காற்று, பிசாசு
அஶிவ	-	அமங்களமான, துரதிர்ஷ்டமான, அன்பில்லாத
அஶுப[ம்]	-	கெட்டது, பாவம், விபத்து, ஆபத்து
அஶேஷ	-	மீதியில்லாத, முழுதுமான, எல்லா பூர்த்தியான
அஶோக	-	துக்கமில்லாத, துயரமற்ற
அஶோகः	-	விஷ்ணு (எப்பொழுதும் ஶோகமில்லாதவன். மற்றவர் துயர் போக்குபவன்) அசோகமரம், ஸந்தோஷம்
அஶ்மன்	-	கல், பாறை, மேகம், இடி
அஶ்ரு	-	கண்ணீர்

அஶ்ருத - கேட்கப்படாத, கேட்கமுடியாத, வேதத்திற்கு விரோதமான

அஶ்லீல - விகாரமான, மனக்கசப்பு உண்டாக்கக் கூடிய, நாகரிகமற்ற, ஆபாசமான

அஶ்வः - குதிரை, எண் ஏழு

அஸம்பா³த⁴ - விஸ்தாரமான, கூட்டமில்லாத, தனித்த, சுலபமான

அஸம்ப⁴வ - நடக்கக்கூடாத, நம்பமுடியாத

அஸம்ப்⁴ரம - அமைதிநிலை, சீரானநிலை

அஸஹந - பொறுத்துக்கொள்ள முடியாத, பொறுமையில்லாத

அஸஹநீய
அஸஹிதவ்ய } - தாங்கமுடியாத, நடக்கக்கூடாத

அஸஹ்ய
அஸஹாய } - உதவியில்லாத, நண்பன் இல்லாத

அஸாதா⁴ரண - ஸாதாரணமானதல்லாத, விசேஷமான

அஸாத்⁴ய - செய்து முடிக்க இயலாத, எளிதல்லாத, நிரூ⁴க்க முடியாத

அஸாத⁴நீய
அஸாம்ப்ரத } - உபயோகமற்ற, உசிதமில்லாத

அஸி: - சண்டை கத்தி, உடைவாள், விலங்குகளை கொல்ல உபயோகப்படும் கத்தி

அவலித - வெண்மையில்லாத கருமையான

அஸு²ர: - அரக்கன், தேவர்களின் எதிரி, ராகு, மேகம்

அஸூயா - அசூயை, பொறாமை, நிந்தித்தல், இழிச்சொல்

அஸ்ருஜ் - ரத்தம், செவ்வாய்கிரகம், குங்குமப்பூ.

அஸௌம்ய (அஸௌஷ்ட²வ) - அழகில்லாத, விகாரமான குரூபமான

அஸௌ - (ஒருமை) பெண்.

அஸ்க²வித - அசைக்கப்படாத திடமான பாதிக்கப்படாத நன்றாக வுள்ள நழுவாத

அஸ்தமநம் - மறைதல், அஸ்தமித்தல்

அஸ்தி - அஸ் என்ற(தாது) இருக்கிறான் (நிகழ்காலம் படர்க்கை ஒருமை)

அஸ்து - இரு. இருக்கட்டும்.

அஸ்தேயம் - திருடாமை

அஸ்த்ரம் - ஆயுதம், அம்பு

அஸ்தி² - எலும்பு, பழத்தின் பருப்பு, விதை

அஸ்தி²ர - ஸ்திரமற்ற நிச்சயமற்ற

அஸ்பஷ்ட - தெளிவற்ற, குழப்பமான

அஸ்மத³ - தன் நிலையை குறிக்கும் பிரதிச்சொல்

அஸ்வஸ்த² - சுகவீனமான

அஹந் - ஒருநாள் (பகலும், இரவும்)

அஹம் - நான்

அஹல்யா - கௌதம முனிவரின் மனைவி

அஹி - பாம்பு, ராஹூ²க்ரஹம், விருத்ராசுரன், அயோக்யன், மோசக்காரன், ஆயில்ய நக்ஷத்ரம், தணணீர் பூமி, தொப்புள்.

தொடரும்

இந்த மாதப் ப்ரபலம்



பெயர் : வைகாநஸ பாரத்வாஜ ஸ்ரீ.உ.வே. கோபாலகிருஷ்ண பட்டாச்சார்

பெற்றோர் : ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸ பட்டாச்சாரியார், ஸ்ரீமதி ராஜம் அம்மங்காள்

பிறந்தநாள் : ஸ்ரீமுக புரட்டாசி 1 (16.9.1933) ஆயில்யம்

கோத்ரம் : பாரத்வாஜம்

கல்வி : 7 வயதில் உபநயனம் பெற்ற இவர் தன் தாத்தா கரிக்ருஷ்ண பட்டாச்சாரியரிடமும் தகப்பனாரிடமும் ஸ்ரீஸாஸ்த்ரத்தைப் பயின்றார்.

உத்யோகம் : தமிழக அரசு பத்ர பதிவுத்துறை இளநிலை உதவியாளராக சேர்ந்து படிப்படியாக உயர்ந்து மாவட்ட பதிவாளராக பணியாற்றி 91 இல் ஓய்வு பெற்றார்.

ஸ்தானீகம் : ஸ்ரீகரிக்ருஷ்ணப் பெருமாள் திருக்கோவில், பொன்னேரி ஸ்ரீராமர் ஸன்னிதி, பரத்வாஜாஸ்ரமம், பொன்னேரி.

ஆற்றிய தொண்டுகள் : அர்ச்சக சங்கத்தில் 40 வருடத்துக்கும் மேல் பணியாற்றினார். 1995 இல் சென்னையில் நடந்த ஸ்ரீவைகாநஸ தென்மாநில மாநாட்டில் காரியதரிசியாக சிறப்பாகப் பணியாற்றினார். மாநாட்டு சிறப்பு மலரை வெளிக்கொணர அரும்பாடுபட்டு, வித்வான்களுடைய கட்டுரை முதலியவற்றை அழகுற வெளியிட்டு பெருமை பெற்றார். பெங்களூர் அத்புதஸாந்தி ஹோமத்தில் முதல்வர் குண்டுராவ் முன்னிலையில் ஸதஸ்ஸில் ஆங்கிலத்தில் ஸ்ரீவைகாநஸம் பற்றி உரையாற்றி பாராட்டு களைப் பெற்றார். U.N.O. சார்பில் இந்திய விஞ்ஞான கலாசார ஆராய்ச்சி மையத்தின் சார்பில் சென்னை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 'இந்தியத் திருவிழாக்கள்' பற்றிய கருத்தரங்கில் உரையாற்றி பெருமை பெற்றார். T.T.D. நடத்திய ப்ருகு மஹர்ஷி க்ரந்த வித்வத் ஸதஸில் ஆங்கிலத்தில் உரையாற்றி ஸபையினரால் நன்கு கௌரவிக்கப்பட்டார். தமிழில் வெளிவரும் ''ஸ்ரீவைகாநஸம்'' பத்ரிகையில் ஸப்தகிரி பத்திரிகையிலும் அவ்வப்போது கட்டுரைகளும் எழுதி வருகிறார்.

ஆகுலமன்னாடு ஸ்ரீபார்த்தசாரதி பட்டாச்சார், வேதாந்தம் ஸ்ரீஜகந்நாதாசார்யார், பண்பாக்கம் ஸ்ரீ மோஷாத்ரி பட்டாச்சார், தரமணி ஸ்ரீராகவ பட்டாச்சார், ஸ்ரீ ஸந்தான பட்டாச்சார் (பட்டணம்கோவில்), திருவல்லிக்கேணி ஸ்ரீ வெங்கடகிருஷ்ண பட்டாச்சார் ஸ்ரீரங்கஸ்வாமி பட்டாச்சார் ஆகியோரது பாராட்டுதல்களை பெற்றவர். இவருடைய ஷஷ்டியப்தபூர்த்தி விழாவில் ஸ்ரீநித்ய அர்ச்சனாவிதி நூலை தமிழில் வெளியிட்டார். மேலும் நித்யார்ச்சனா விதி, அனுபந்தம், ஸாஸ்த்ர வினாவிடை இரு தொகுப்புகள், புண்யாஹம், அக்னிப்ரதிஷ்டை, அந்த ஹோமம் தமிழில் வெளியிட்டுள்ளார். பாலாலயம், ஸம்ப்ரோக்ஷணம் குறித்து இவரது புத்தகம் வெளிவர உள்ளது. நமது சமூஹ முன்னேற்றத்தையே சதா சிந்தித்தும் பேசியும் எழுதியும் வருவதையே தனது லக்ஷ்யமாகக் கொண்டுள்ளார். சென்னை தி.நகரில் அர்ச்சக சங்க மாநாட்டில் பல ஸைவர்கள், பாஞ்சராத்ரிகள் கேட்ட கேள்விகளுக்கு தக்க சமாதானம் அளித்தும் காஞ்சி சங்கர மடத்தில் நடந்த வைகாநஸ ஸதஸ்ஸிலும் தக்க சமாதானம் அளித்தும் அனைவருடைய பாராட்டுதல் களையும் பெற்றவர்.

முகவரி : 10, ஸமரபுரி முதலி தெரு, திருவாயர்பாடி, பொன்னேரி.

தையற்கலை-5

செல்வி D. கல்யாணி, M.A., B.Ed., தையல் கலை ஆசிரியை, மேற்கு மாம்பலம்

ஜப்லா

அளவு எடுக்கும் விதம்

A உயரம் + 1''

B மார்பு சுற்றளவு +6/4'' *

C ஷோல்டர் அகலம் + ¼''

மாதிரி அளவு

உயரம் 10 + 1 = 11''

மார்பு சுற்றளவு = 16 +6/4 = 22/4 = 5½''

ஷோல்டர் அகலம் = 3¾ + ¼ = 4''

ஹாம்ஹோல் 3½;

ஷோல்டர் 1½ + ½ = 2''

பின் கழுத்து 1½; முன் கழுத்து 3''

2 to 1 = 10 + 1=11''

2 to 3 = மார்பு சுற்றளவு +6/4''

1 to 5 = ஷோல்டர் அகலம் + 1/4''

6 to 5 = ஷோல்டர் + ½''

1 to 10 = பின் கழுத்து

1 to 11 = முன் கழுத்து

4 to 7 = ஹாம்ஹோல்

9 to 8 = சைட் கிராஸ் ½''

மாதிரி அளவு படம்



அளவு எடுத்து வெட்டும் விதம்

மாதிரி ஜப்லாவின் உயரம் அளந்து தையலுக்காக 1'' சேர்த்து இருமடங்காக எடுக்க வேண்டும். மார்பு சுற்றளவு அளந்து + 6'' சேர்த்து நான்கால் வகுக்க வேண்டும். உயம் 10 + 1 = 11 மார்பு சுற்றளவு 16 +6/4 = 5½ இரு மடங்காக எடுக்கும் போது உயரம் 11 + 11 = 22 மார்பு சுற்றளவு 5½ + 5½ = 11 எடுத்து கோடு போட்டு கட் செய்யவும். பின்பு துணியை நான்காக மடித்துக்கொள்ளவும். முதலில் 1 to 5 ஷோல்டர் அகலம் 4'' மார்க் செய்யவும். 6 to 5 ஷோல்டர் 2'' மார்க் செய்யவும். 1 to 10 பின்கழுத்து 1½'' மார்க் செய்யவும். 1 to 11 முன்கழுத்து 3'' மார்க் செய்து இரண்டு கழுத்து பாகமும் வளைவாக வரையவும். 4 to 7 ஹாம்ஹோல் 3½'' மார்க் செய்து வளைவாக வரையவும். 9 to 8½'' சைட் கிராஸ் மார்க் செய்து கிராஸ் கோடு போடவும்.

வெட்டும் போது முதலில் சைட் கிராஸ் வெட்டி பின்பு ஹாம்ஹோல் வளைவாக வெட்டவும். பின்பு பின்கழுத்து தனியாகவும் முன் கழுத்து தனியாகவும் வளைவாக வெட்டவும்.

ஜப்லா தைக்கும் முறை

1. முன்பக்க துணியும் பின்பக்க துணியும் ஷோல்டரில் சேர்த்து தைக்கவும்.

2. பின்பக்க நடுபாகத்தில் ஓப்பன் கட் செய்து இருபுறமும் மெல்லியதாக மடித்து தைக்கவும்.

3. ஹாம்ஹோல் மற்றும் கழுத்து பாகத்தை மெல்லியதாக உருட்டி தைக்கவும்.

4. கீழ்புறம் மடித்து தைக்கவும்.

5. பின் பக்கம் ஓப்பனுக்கு நாடா வைத்து தைக்கலாம் அல்லது பிரஸ்பட்டன் வைத்து தைத்து முடிக்கவும். ஜப்லா பிறந்த குழந்தையிலிருந்து 1 வயது வரை போடலாம். வெயிலுக்கு இவ்வுடை பொருந்தும்.

(தொடரும்)

சிறுவர் பகுதி

உன்னை நீ அறிவாய்! -6

By தேனீ

உரையாடல் தொடர்கிறது....

பேரன் : என்ன தாத்தா! ஒரு வாரமா உங்களைப் பார்க்காமல் எனக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. எப்ப வருவீர்கள் என காத்திருந்தேன்.

தாத்தா : எனக்கும்தான் கஷ்டம். பெருமாள் கோவில் ஸம்புரோக்ஷணத்திற்காக ஊருக்குப் போயிருந்தேன். சம்ப்ரோக்ஷணம் மிக நன்றாக நடந்தது.

பேரன் : சம்ப்ரோக்ஷணம் என்றால் என்ன?

தாத்தா : கோவில் கட்டி பெருமாள் விக்ரஹங்களை பிரதிஷ்டை செய்து, யாக குண்டங்களை அமைத்து, ஸ்ரீ வைகானஸ பகவத் ஸாஸ்த்ர விதிப்படி குடங்களில் ஆவாஹனம் பண்ணி, யாகம் செய்து, பூர்த்தியாக, பிம்பங்களில் ஆவாஹனம் செய்து, விமானத்திலும் கடதீர்த்தம் ப்ரோக்ஷிப்பது சம்ப்ரோக்ஷணம். அதாவது, நன்கு மந்திரநீரைத் தெளிப்பது என்பது. அதையே ஸாமாந்ய உலக வழக்கில் கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்பர்.

பேரன் : எல்லா கோவில்களுக்கும் இதேமாதிரிதான் சம்ப்ரோக்ஷணம் செய்வார்களா?

தாத்தா : நம் ஆசாரியன் தீர்க்கதரிசி. அவர் உபதேசித்து, அவற்றை வகுத்துக் கொடுத்த அத்ரி பிருகு மரீசி காஸ்யபர்களும் மிகத் தெளிவாக ஆலய நிர்மாணம், பரிவார தேவதைகளின் அமைப்பு, தேவதைப் பிரதிஷ்டைக்காக, சிலைகளின் உயரம், பருமன் அகலம் அங்க அமைப்பு சின்னங்கள், மற்றும் பிம்பங்களை பூஜிக்கும் விதி, நித்திய, உத்ஸவ பூஜாவிதி, பிராயச்சித்தவிதி, தந்திர, மந்திர பூஜை எல்லாவற்றையும் மிகத் தெளிவாக சொல்லியுள்ளார். அதேபோல ஆராதனை செய்யும் அர்ச்சகர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள், பக்தர்கள் கோவிலில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறை யாவற்றையும் சொல்லியுள்ளார். எந்த சந்தேகம் வந்தாலும், அதனை நிவர்த்தி செய்ய பிரமாணங்கள் அத்ரி பிருகு காஸ்யபர் மரீசி கிரந்தங்களில் காணலாம். என்ன ஆச்சரியம் என்றால், எவ்வளவோ காலதேச பழக்க மாற்றங்கள் வந்தாலும் மந்திரங்களும், பிரதிஷ்டா விதிகளிலும் எந்த மாற்றமும் இல்லாமல் இன்றளவும் பெரிய, சிறிய கோவில்களில் ஸ்ரீவைகானஸ ஆகம ப்ரதிஷ்டைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இதோ பார் ப்ரதிஷ்டை பத்திரிகையை!

பேரன் : என்ன தாத்தா! ஜீர்ணோத்தாரண ஸம்புரோக்ஷணம் என்று எழுதியுள்ளார்களே!

தாத்தா : புதிதாகக் கட்டியதை நூதன பிரதிஷ்டை என்பார்கள்! ஏற்கனவே இருந்த கோவில்களை தட்டிப் பூசி, சுத்தம் செய்து பழைய தேய்ந்துபோன அஷ்டபந்தன மருந்து முதலியவற்றை நீக்கி, புதிதாக மருந்து சாத்தி புதுப்பித்து செய்யும் ஸம்புரோக்ஷணத்தை ஜீர்ண உத்தாரண சம்புரோக்ஷணம். ஜீர்ணம் என்பது கரைந்து போதல் என்பதும் உத்தாரணம் என்பது புதுப்பித்தல் என்றும் சொல்லலாம்.

பேரன் : கோவில் என்றால் இப்படித்தான் அமைய வேண்டும் என்று இருக்கிறதா?

தாத்தா : நன்றாகக் கேட்டாய்! கொஞ்சம்கூட சந்தேகமின்றி சில்ப சாஸ்திரம் கற்ற ஸ்தபதிகளும், த்யான ஸ்லோகங்களை அனுசரித்து, ஆகமத்தில் கூறப்பட்டுள்ள சில்பங்களை வடித்துக் கொடுக்கின்றனர். அவற்றுக்கு உயிரூட்டுவதைத்தான், இந்தப் பிரதிஷ்டை யக்ஞங்கள் மூலம் பட்டாச்சாரியார்கள் செய்கின்றனர். முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது முறைப்படி பிரதிஷ்டையால் உலகுக்கு நன்மையும் தவறிச் செய்தால் பெருந்தீங்கும் ஏற்படும்.

எனவேதான் பிரதிஷ்டா ரத்னங்களாக விளங்கும் பெரியோர்கள் மிகவும் பயபக்தியுடனும் மந்த்ர, க்ரியா லோபங்களின்றி சம்புரோக்ஷணம் நடைபெறவேண்டும் என கவலையோடு யக்ஞம் செய்வர். ஆகம விதிகள் வழுவாமல் பிரதிஷ்டை செய்வது உத்தமம். அவற்றை ஏன் எதற்காக செய்யவேண்டும்என்பதை மக்களுக்குவிளக்கினால்மக்களும்சிரத்தையுடன் கைங்கர்யங்களில் முறைப்படி செய்ய முன்வருவார்கள். இந்த சம்புரோக்ஷண பத்திரிகையைப் பார். சம்புரோக்ஷணத்தின்போது என்ன என்ன செய்கிறார்கள் எனப் புரியும்.

பேரன் : தாத்தா! பத்திரிகையில் பல வார்த்தைகள் புரியவில்லையே தாத்தா!

தாத்தா : என்ன புரியவில்லை. படி. விளக்கிச் சொல்கிறேன்.

பேரன் : அங்குரார்ப்பணம் என்றால் என்ன?

தாத்தா : சின்ன கேள்வியிலே பெரிய விஷயத்தைக் கேட்டுவிட்டாய்! சந்தோஷம். உனக்குப் புரியும்படியாக சொல்கிறேன் கேட்டுக்கொள். ஸம்புரோக்ஷணம் உத்ஸவங்கள் முதலிய காரியங்களுக்கு ஆரம்பத்தில் அங்குரோர்ப்பணம் செய்ய வேண்டும். அதற்குமுன் ம்ருத்சங்க்ரஹணம் செய்ய வேண்டும். அதாவது மண் எடுத்தல் என்பது. பஞ்சபூதங்களில் முதன்மை பூமி. அதை பூஜை செய்து மண் எடுத்து முளைகட்டிய தானியங்களை சேர்த்து அங்குரார்ப்பணம் செய்வர்.

பேரன் : மண் கொஞ்சம் வெட்டி எடுத்து வந்தால் போதாதா! இதற்கு என்ன மிருத் சங்க்ரஹணம் எனச் சொல்கிறீர்களே!

தாத்தா : பெரியோர்கள் வகுத்த வழிகளுக்கு நிறைய காரணங்கள் உண்டு. கல்யாணம், உபநயனம், கட்டிடம் கட்டுதல், பந்தல்கால் நடுதல் எல்லாவற்றிலும் பூமி தேவியைப் ப்ரார்த்தனை செய்து துவங்குவர். செய்கின்ற காரியங்கள் சீராக, நன்கு நடந்தேற பெருமாளையும் பூமிதேவியையும் பிரார்த்தித்து முளையிட்ட தானியங்கள் நல்ல மண்ணில் சேர்த்து துவங்கும் காரியங்கள் முளைப்பயிர் நன்கு வளர்வதுபோல நன்கு

நடைபெறும் என்பது திண்ணம். ம்ருத்சங்கரஹணத்திற்கும் விதிகள் உண்டு.

ஆச்சாரியர்கள், யஜமானர்கள் யாவரும் புத்தாடை உடுத்தி, மாலை வேளையில் சக்ரத்தாழ்வார் கருடன் விஷ்வக்ஸேனர் ஆகியோருக்கு 27 உபசாரங்களுடன் பூஜை செய்து, புஷ்பங்களால் அலங்கரித்த மண்வெட்டி (தங்கம் (அ) உலோகம்) தாம்பாளம், புண்யாகவாசனத்திற்குரிய பொருட்களுடன், ஆலயத்திற்கு கிழக்கு வடக்கு அல்லது ஈசான்ய (வடகிழக்கு) பக்கம் சுத்தமான இடத்தில் 4 அங்குலம் போல் மண்ணை எடுத்துவிட்டு பசுஞ்சாணம் இட்டு கோலம் போட்டு, 'பூமிர்பூம்ணா' என்ற மந்திரத்தால் பூமியை உருண்டை வடிவமாக கோடு கிழித்து அதன் நடுவில் பூமிதேவியை வரைவர். பூமிதேவியின் தலை வடகிழக்கில், தென்மேற்கில் வலதுகால் லேசாக மடித்தும், இடதுகால் நீட்டியும் இருக்கும். வலது கையில் கரு நெய்தல் புஷ்பமும் இடது கையை துடைவரை நீட்டி வஸ்த்ரங்களால் அலங்கரித்து மந்திரங்களால் 11வித உபசாரங்களால் பூசிப்பார்கள். இன்றைய தினம் உன் பர்த்தாவான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் ப்ரதிஷ்டை அங்குரார்ப்பணத் திற்காக தேவையான மண்ணை எடுத்துக் கொள்கிறேன் சம்புரோக்ஷண கார்யங்கள் நன்கு பூர்த்தியாக வேண்டும் எனப் பிரார்த்தித்து பூமிதேவி யின் அனுமதியைக் கேட்கின்றனர். பின்னர் புண்யாகவாசனம் செய்து பூமிதேவியின் நாற்புறமும் கிழக்கில் கருடன், தெற்கில் மண்வெட்டியில் சேஷன், மேற்கில் சக்கரம், வடக்கில் விஷ்வக்ஸேனர் ஆவாஹனம் செய்து ஆராதிக்க வேண்டும். பின்னர் ஆச்சார்யன் தன்னை ஸகரராஜ னாக நினைத்து பூமிதேவியின் முகம், மார்பு, வயிறு பாகங்களில் மண் எடுத்து, தாம்பாளத்தில் சேர்ப்பார்கள். மற்ற பாகங்களை வெட்டாமல் பூமிதேவியை விஸர்ஜனம் செய்வர். இவ்வாறு மண் சேகரிப்பதற்கு பெயர் மிருத் சங்க்ரஹணம்.

பேரன் : அடேயப்பா! மண்வெட்டி எடுத்து மண் எடுப்பது என்பதற்கு இவ்வளவு கார்யங்கள் இருக்கிறதா? அதற்கு மந்திரங்கள், வழிமுறைகள் இருக்கிறதா? மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே!

தாத்தா : பெரியோர்கள் செய்யும் காரியங்கள் அதுவும் பகவத் கார்யத்தில் நிறைய காரண காரியங்கள் இருக்கின்றன. நன்கு புரிந்துகொண்டு செய்தால் பகவானுக்குப் பிரியம் ஏற்பட்டு எல்லோருக்கும் நல்லருளைத் தருவார். சின்ன விஷயம் என பெரிய விஷயங்களை நீ கேட்க ஆரம்பித்துவிட்டாய்! உனக்கு எல்லாவற்றையும் தெளிவாக, விரிவாக சொல்ல எனக்கும் ஆசை. மிருத்சங்க்ரஹரணம் மண் சேர்த்தல் ஆகிவிட்டது. அங்குரார்ப்பணம் பற்றி நாளைக்குச் சொல்லட்டுமா?

பேரன் : எனக்கும் பள்ளி விடுமுறைதான். உங்களுக்கு நேரமிருக்கும் போது கூப்பிடுங்கள். நானும் விரிவாக தெரிந்து கொள்கிறேன். (இருவரும் கலைகிறார்கள்) **(தொடரும்)**

ஸ்ரீவைகானஸ குறள் மொழிகள்

ஆராதனம் இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்தற்று

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனை
அர்ச்சகன் எனக் கேட்டதாய்

கேள்வி பதில்

கேள்விகள்: ஸ்ரீ உ.வே.S.B. நாராயண பட்டாச்சார், வடகுடி.
பதில்கள் : ஸ்ரீ உ.வே.S. கோபாலகிருஷ்ண பட்டாச்சார், பொன்னேரி.

1. கேசரீபுத்திரன், வாயுபுத்திரன், ஈஸ்வர புத்திரன் என அனைத்தும் பொருந்துமா?

புஞ்சகஸ்தலை என்கிற அப்ஸரஸ் சாபத்தின் காரணமாக, அஞ்ஜனை என்கிற வானரமாகப் பிறந்து கேசரீ என்கிற வானரனை மணந்தாள். அஞ்சனா புத்திரனான அநுமனை கேசரீஸுதன் என்று வழங்கப்பட்டு வருகிறது.

வாயுதேவன் புஞ்சகஸ்தலை என்கிற அப்ஸரஸ்தான் அஞ்சனையாக சாபத்தின் காரணமாகப் பிறந்திருக்கிறாள் என்பதை அறிந்துகொண்டு அவளைப் புணர்ந்தான். அப்ஸரஸ்ஸுக்கள் தேவர்களின் மோகத்திற்காக உள்ளவர்கள். வாயுதேவனுக்குப் பிறந்ததால்வாயுகுமாரன்எனப்படுகிறான். ருத்ரவீர்யஸமுத்பவன்: அஞ்சனை ருத்ரனைக் குறித்து தவம் மேற் கொண்டிருந்தாள். அந்த ஸமயத்தில் வாயுதேவன் அவளை வலிந்து புணர்ந்தான். வீர்யம் முக்குணமயமானது. ஸௌம்யம் ரௌத்ரம். தாமஸம் என்று பகுத்துக் காணப்படுகிறது. ஆண் பெண் இருவரும் மனம் ஒத்து புணரும்போது வெளிப்படம் வீர்யம் ஸௌம்யம் எனப்படும்.

பெண்ணின் இசைவு இல்லாமல் ஆண் வலிந்து புணரும்போது வெளிப்படும் வீர்யம் ராஜஸம், ரௌத்ரம் என்று கூறப்படும். ஸ்வப்னத்தில் புணர்வது, பிற பெண்களைக் கண்ட மாத்திரத்தில் ஸ்கலிதமாகும் வீர்யம் தாமஸம் எனப்படும். ருத்ரனைக் குறித்து தபஸ் செய்து கொண்டிருந்த அஞ்சனையை வாயு வலிந்து புணர்ந்ததால் வெளிப்பட்ட ருத்ர வீர்யத்தின் காரணமாகப் பிறந்தவர் என்பதால் ருத்ரவீர்ய ஸமுத்பவர் என்று அழைக்கப்பட்டார். தனக்குப் புத்திரன் வேண்டுமென்று அஞ்சனை ருத்ரனை நினைந்து தவம் செய்து கொண்டிருந்தபோது வாயுதேவனால் கர்ப்பதானம் ஏற்பட்டதாலும் யத்பாவயதி தத்பவதி என்கிறபடி ருத்ரனுடைய க்ருபையால் இது ஏற்பட்டது என்பதால் ருத்ர வீர்யம் என்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீராமனை தசரத புத்ரன் என்கிறோம். தசரதனுடைய வீர்யத்திற்குப் பிறந்தவர்கள் அல்ல ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள். தசரதருடைய பத்னிகளின் கர்ப்பத்தில் வாஸம் செய்ததால் தசரத புத்ரர்கள் என்கிறோம். அதுபோல் கேசரியின் மனைவியில் கர்ப்பத்தில் தோன்றியதால் அனுமன் கேஸரி ஸுதன் எனப்படுகிறார்.

அனுமனை வால்மீகி தன் ஆதி காவ்யத்தில் வாயுகுமாரனாகவே குறித்திருக்கிறார். வால்மீகியின் வாக்கிலிருந்து பிறக்கும் இராம கதையில் கூறப்பட்டவை அனைத்துமே சத்தியமானவையாயிருக்கும் என்பது பிரம்மாவின் வரம்.

''ந தேவாம் ஆந்ருதா காவ்யே காசி தத்ரபவிஷ்யதி''

என்பது பிரம்மாவின் வாக்கு. இதில் நம்பிக்கையிருந்தால் அனுமன் வாயு குமாரன் என்பதை ஏற்றுக் கொள்ளத் தயங்க வேண்டியதில்லை.

வாயுகுமாரன் நான் என்று அனுமனே ஸீதையிடம் கூறுகிறான்.

நாரதர் வால்மீகிக்கு உபதேசித்த ஶதகோடிப்ரவிஸ்தாரமான ராமாயணத்தின் ஸங்க்ஷேபத்திலும்

க்ரஹணம் வாயுஸூநோஸ்ச லங்கா தாஹாபி கர்ஜனம் என்று லங்கையை எரித்த அனுமன் வாயுகுமாரன் என்றே குறிக்கப்பட்டுள்ளது.

நித்ய ஸூரிகளின் அவதாரமாகக் கருதப்படும் ஆழ்வார்களும் அனுமனை வாயு குமாரனாகவே குறிப்பிட்டுள்ளனர்.

''வாதமாமகன்'' என்பது காண்க. வங்காள மொழியில் கிருத்திவாசர் என்பவரால் இயற்றப்பட்ட இராமாயணத்தில் மட்டுமே அனுமன் சிவனின் அவதாரமாகக் குறிக்கப்பட்டுள்ளார்.

முக்காலமும் அறிந்த பிரம்ம ரிஷிகளான நாரதர் வால்மீகி ஆகியவர்கள் அனுமானை வாயுகுமாரன் என்றே குறிப்பிட்டுள்ளனர். அனுமான் தன்னை தாஸோஹம் கோஶலேந்தரஸ்ய என்று சொல்லிக் கொள்கிறார். இராமனின் அடிமையாகிய அனுமன் வாயுகுமாரனே.

மேல்கூறிய காரணங்களால் அனுமனை கேசரிஸுதன், வாயுகுமாரன், ருத்ரவீர்ய ஸமுத்பவன் என்றெல்லாம் குறிப்பிட்டதில் அனுபபத்தி (தவறு) ஒன்றுமில்லை.

2. பஞ்சமுக ஹநுமானுக்குப் ப்ரமாணம் உண்டா?

சதகண்ட ராவணன் என்று ஒருவன் இருந்தான். அவனுடைய குமாரர்களுக்கு சதகண்டர்கள் என்று பெயர். சாகாவரம் வேண்டி தபஸ் செய்தனர். அவ்வாறு வரம் கொடுக்க இயலாது என்று பிரம்மன் தெரிவித்தார். அப்படியானால் குரங்கு, குதிரை, பன்றி, சிங்கம், பக்ஷி இவைகளின் தலையை உடைய ஒரு ஜீவனால் ஒழிய மரணம் ஏற்படக்கூடாது என்று வரம் பெற்றனர். ஹநுமாருக்கு நினைத்த வடிவம் கொள்ளும் ஆற்றலை தேவர்கள் வழங்கியுள்ளனர். சதகண்ட இராவணனைக் கொல்லச் சென்ற அனுமானை அவன் குமாரர்களாகிய சதகண்டர்கள் எதிர்த்தனர். அவர்களை பஞ்சமுகங்களைக் கொண்ட வடிவத்துடன் ஹனுமார் கொன்றார் சதகண்டமதாபஹாய நமஃ என்ற நாமாவளியின் பின் நிற்கும் சரித்திரம் இது. உத்தரராம சரித்திரத்திலும் இது சொல்லப்பட்டுள்ளது. வாயு குமாரனாகிய ஹனுமான்தான் சதகண்டர்களைக் கொல்வதற்காக ஐந்து முகங்களுடன் தோன்றினார்.

3. துளசி, பில்வம், மஞ்சள் குங்குமம் கொண்டு அனுமானை அர்ச்சிக்கலாமா?

அந்தர்பஹிச்ச - தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்திதஃ

ஸர்வதேவ நமஸ்காரம் கேசவம் ப்ரதிகச்சதி

லக்ஷ்மீநாராயணனின் அவதாரமான ஸீதா ராமர்களை நெஞ்சில் நிலைகொண்டவன் என்பதால் அர்ச்சிக்கலாம்.

4. ஹனுமத் ஜயந்தி என்று செய்யவேண்டும்?

மார்கழி அமாவாசையன்று ஹனுமத் ஜயந்தி புராணோக்தமாக நடத்தப்படுகிறது. வைகானஸ சாஸ்திரப்படி ஆவணியில் ஸ்ரவணத்தில் ஹனுமத் ஜயந்தி சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகானஸ குறள் மொழிகள்

ஒல்லும் வகையான் விஷ்ணுவை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் தொழல

மணவாழ்த்து

திருநெல்வேலி ஸ்ரீ V. ராஜாமணி பட்டாச்சாரியார் குமாரன் சிர. லெக்ஷ்மி நாராயணனுக்கும் ஆரணி ஸ்ரீ P.V. இராஜகோபால பட்டாச்சார் குமாரத்தி சௌ. சுஜாதாவுக்கும் 10.5.2000 அன்று ஆரணியில் விவாஹம் நடைபெற்றது.

பெங்களூர் ஸ்ரீ A. வெங்கடநரசிம்மாச்சார் குமாரத்தி சௌ. பானுமதிக்கும் நாமக்கல் Dt. சேர்ந்த மங்கலம் ஸ்ரீ K.S. துரைசாமி பட்டாச்சார் குமாரன் சிர. Dr.D. ஸ்ரீனிவாசனுக்கும் 28.5.2000 பெங்களூரில் விவாஹம் நடைபெற்றது.

சென்னை சிந்தாதரிப்பேட்டை ஸ்ரீ C.K. ஸ்ரீநிவாச பட்டாச்சார் குமாரன் சிர. கோவிந்தராஜனுக்கும் சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ.T. கோபாலபட்டாச்சார் குமாரத்தி சௌ. லதா லக்ஷ்மிக்கும் 25.5.2000 அன்று திருவல்லிக்கேணியில் விவாஹம் நடைபெற்றது.

சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ N.G. ஸ்ரீனிவாச பட்டாச்சார் குமாரத்தியும் நமது பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ N.S. பார்த்தசாரதி பட்டாச்சாரியாரின் சகோதரியுமான சௌ. வஸந்தாவுக்கும் சென்னை திருவான்மியூர் ஸ்ரீ S. ஸ்ரீனிவாச பட்டாச்சாரியாரின் (Jassons) குமாரன் சிர. அரவிந்தனுக்கும் 5.6.2000 அன்று சென்னை திருவல்லிக்கேணியில் விவாஹம் நடைபெற்றது. நம் பத்ரிகைக்கு சம்பாவனையாக ரூ. 1001/- வழங்கப் பெற்றது.

நான்குநேரி ஸ்ரீ V. ஸ்ரீனிவாச பட்டர் குமாரன் சிர.S. வெங்கடேசனுக்கும் லால்குடி ஸ்ரீ S.K. கல்யாணராம பட்டாச்சாரியாரின் குமாரத்தி சௌ. கீதா லெக்ஷ்மிக்கும் 5.6.2000 அன்று லால்குடியில் விவாஹம் நடைபெற்றது.

மேற்கண்ட நூதன தம்பதிகளுக்கு நம் ஹ்ருதய பூர்வமான ஆசிகள்

ஸ்ரீ வைகானஸம், A.K.S. Trust.

உபநயனம்

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ S. லெக்ஷ்மண பட்டாச்சாரியாரின் குமாரன் சிர. L. சுதர்ஸனனு க்கு 9.4.2000 அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் உபநயன சுபமுகூர்த்தம் நடைபெற்றது. பத்திரிகைக்கு ரூபாய் 51 சம்பாவனையாக வழங்கப்பட்டது.

மயிலாடுதுறை மறையூர் ஸ்ரீ வெங்கட்ராம பட்டாச்சாரியாரின் குமாரன் சிர.V.S. சுரேஷ்பாபுவிற்கு 7.5.2000 அன்று மயிலாடுதுறையில் உபநயன சுபமுகூர்த்தம் நடைபெற்றது. பத்திரிகைக்கு ரூபாய் 51 சம்பாவனையாக வழங்கப்பட்டது. மேற்கண்ட வடுகளுக்கு நம் மனப்பூர்வமான ஆசிகள்

ஸ்ரீ வைகானஸம், A.K.S. Trust.

சீமந்தம்

வரகூர் ஸ்ரீ S. இராமமூர்த்தி பட்டாச்சாரியாரின் குமாரன் ஸ்ரீ R. ஸ்ரீனிவாசனின் தர்மபத்தினி சௌ. வித்யாஸ்ரீக்கு 21.5.2000 அன்று வரகூரில் பும்ஸவன சீமந்தம் நடைபெற்றது. தம்பதிக்கு நம் ஹ்ருதய பூர்வமான ஆசிகள்.

ஸ்ரீ வைகானஸம், A.K.S. Trust.

வர்ஷவர்த்தனம்

நசரத்பேட்டை ஸ்ரீ.வி. பாலாஜி பட்டாச்சாரியாரின் குமாரன் சிர. B. ராகவனுக்கு 4.6.2000 அன்று திருநீர்மலையில் வர்ஷவர்த்தன ஆயுஷ்ஹோம கர்ணபூஷண முகூர்த்தம் நடைபெற்றது. குழந்தைக்கு நம் ஹ்ருதய பூர்வமான ஆசிகள்.

ஸ்ரீ வைகானஸம், A.K.S. Trust.

கிருஹப்பிரவேஶம்

அரும்புலிர் ஸ்ரீ ரகுநாத பட்டாச்சாரியார் மற்றும் ஸ்ரீ. ஸ்ரீனிவாச பட்டாச்சாரியார் செங்கல்படடில் கட்டியுள்ள நூதன கிருஹத்திற்கு 15.5.2000 அன்று நூதன கிருகப்பிரவேஶ சுபமுகூர்த்தம் நடைபெற்றது.

ஸ்ரீவைகானஸ குல ஸ்வாமிகளின் கவனத்திற்கு

ஸ்ரீவைகானஸ குல ஸ்வாமிகளின் விலாஸ புத்தகம் தயார்படுத்தி அனைவருக்கும் வழங்க உத்தேசித்துள்ளோம். இதற்காக திருவல்லிக்கேணி ஸ்ரீ.S.ராஜராம பட்டாச்சார் ஸ்வாமியை பொறுப்பாளராக நியமித்துள்ளோம். நம் வைகானஸ குல ஸ்வாமிகள் கீழ்கானும் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கீழே கொடுக்கப்பட்டள்ள விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த விண்ணப்பப் படிவத்தினை எத்தனை ஜெராக்ஸ் காப்பி வேண்டுமானாலும் எடுத்து அனுப்பலாம். தங்களுடைய பந்துக்கள் அனைவருடைய விலாசத்தையும் பூர்த்தி செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

..... Pincode .....

Ph.No.(STDCode) .....

விண்ணப்படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ. S. ராஜாராம பட்டாச்சார்
37/ -12, விஜய் அவின்யூ,
வீ.ஆர். பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
போன் : 044 - 844 1883.

குறுக்கெழுத்துப் பரிசுப் போட்டி5க்கானவிடை

1 ம	ந்	15 தி	14 ர	13 பு	ஷ்	ப	ம்	12 பூ
ந்		ரோ	த்	ஷ்	ர்	ணி	ண்	த 11
த்		ண	தா	ப	தை	ர்	க	10 சு
ர	ம்	ர்	ம்	2 யா	19 க	16 சா	லை	த்
ப்	ப		3 ப	க	டை	4 ம	ற	தி
ர			ர	ம்	5 ஆ	ர	த்	தி 17
ஸ்	ங்	6 ச	ம்	ப	ள	ம்	க	யா 9
ன	18 ஸ	ங்	க	ல்	ப	ம்	ட	க 8
ம்	ன	மா	7 வி	ழா	ய	ன்		ம்

சென்ற மாத இதழில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டி-5க்கான விடைகளை பலர் சரியாக எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.100/- பரிசு பெறும் அதிருஷ்டசாலி ஸ்ரீ. L. பாலாஜி பட்டாச்சார், திருவல்லிக்கேணி, சென்னை.

வருட சந்தா ரூ.60/- இரண்டு வருட சந்தா ரூ.110/-

ஆயுள் (நிரந்தர) சந்தா ரூ.1001/-

A.K.S. Trust பெயரில் D.D. அல்லது மனியார்டர் மூலமாக உங்கள் சந்தா தொகையை அனுப்பவும். D.D. சென்னையில் மாற்றத் தக்க வகையில் இருக்க வேண்டும். சந்தா அனுப்பவேண்டிய முகவரி

AKS Trust 24, எல்லையம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

சந்தா படிவம்

சந்தா அனுப்புபவரின் பெயர்: .....

முகவரி: .....

.....

Pincode ..... Ph.No.(STDCode) .....

அனுப்பப்படும் தொகை: ரூபாய் 60 / 110 / 1001

வங்கியின் பெயர்.....

டி.டி.எண்./எம்.ஓ. ரசீது எண்:.....தேதி:.....

மணமாலை பகுதி விண்ணப்பப் படிவம்

விவாஹத்திற்கு இருக்கும் வது/வரன்களை, கீழ்க்கண்ட குறிப்புகளை பூர்த்தி செய்து அனுப்பினால் இந்தப் பகுதியில் பிரசுரிக்கப்படும். இந்த பகுதி முற்றிலும் வைகாநஸ குலத்தில் பிறந்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

பெயர் ..... ஆண்/பெண்

பிறந்த தேதி ..... வயது (.....)

கோத்ரம் ..... நக்ஷத்திரம்.....

கல்வி தகுதி .....

வேலை ..... சம்பளம் .....

உயரம்..... இருக்கும் வீடு : (சொந்தம்/வாடகை)

தந்தை பெயர் .....

தந்தையின் வேலை .....

முகவரி .....

.....

.....

Pincode.....

Phone No. (STD Code).....

தேடும் வரன்/வதூ எப்படி வரவேண்டும் .....

குறிப்பு: தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மட்டுமே மணமாலை பகுதியில் இந்த விளம்பரம் வெளியிடப்படும். விளம்பரக் கட்டணம் ஏதுமில்லை.

கையொப்பம்

Office Use

Srl.No. Code:

Age: Sex:

Entry on:

த்வாதஶ மாஸார்ச்சனம்

N.S. பார்த்தஸாரதி பட்டாச்சாரியார், ஆசிரியர், ''ஸ்ரீவைகானஸம்''

ஜ்யேஷ்ட மாஸார்ச்சனம்

கேட்டை நக்ஷத்திரத்திலே பௌர்ணமி சேர்வதால் ஜ்யேஷ்டமாஸம் என்று பெயர் பெற்ற இந்த மாதம் ஸௌரமானத்தில் ஆனி மாதத்திய பௌர்ணமியை மையமாக கொண்டுள்ளது.

இந்த ஜ்யேஷ்ட (ஆனி) மாதத்தில் எம்பெருமானுக்கு நித்யம் திருமஞ்ஜன தீர்த்தம் கொண்டுவர ஏற்பாடு செய்வதுடன் ம்ருதுவான பட்டு, பருத்தி வஸ்த்ரங்களை சாற்றக் கொடுப்பவர் வருட முழுதும் எம்பெருமானுக்கு திருமஞ்ஜன தீர்த்தமும், வஸ்த்ரங்களும் சாற்றிய பலனை அடைகிறார் என்று ஸ்ரீமரிசி மஹர்ஷி அருளிச்செய்திருக்கிறார்.

ஸ்ரீப்ருகு மஹர்ஷி க்ரியாதிகாரத்தில், ஜ்யேஷ்டமாஸத்தில் மூலநக்ஷத்திரத்தன்று எம்பெருமானுக்கு வஸ்த்ரம் ஸமர்பித்து பௌர்ணமியன்று விஶேஷ திருமஞ்ஜனம், அலங்காரம் செய்வித்து ப்ரஸாதங்கள் திருவமுது செய்யவேண்டும் என விதிக்கிறார்.

ஸ்ரீஅத்ரிமஹர்ஷியும், மேற்கண்டவாறு ஸாதித்து மேலும் குடைதானம், மற்றும் ஸ்நாந தீர்த்தம் ஏற்பாடு செய்வதை சிலாகித்துக் கூறியுள்ளார். தன் ஶக்திக்கு தக்கபடி எம்பெருமானுக்கு பட்டு முதலான வஸ்த்ரங்களை ஸமர்ப்பித்து மஹாஹவி என்றபடி நிரம்ப ப்ரஸாதங்கள் கண்டருளச் செய்கின்றவருடைய வஸ்த்ரங்கள் வ்ருத்தியடையும் என்று ஸ்ரீஅத்ரி மஹர்ஷி அனுக்ரஹிக்கிறார்.

அரிது அரிது அர்ச்சகராய் பிறத்தல் அரிது

நெ.ர. வாசுதேவ பட்டாச்சாரியார் சின்னமுறை, திருவல்லிக்கேணி

அர்ச்சகப் பிறவியெனும் இவ்வரிய பதவியை
அடைந்திட்ட நாம் மகிழ்வோம்
ஆலய வழி பாட்டினை அளித்த நம் விகனஸன்
அடிதனைப் போற்றிடு வோம்
எட்ட நின்று இரு கை கூப்பி
இறைஞ்சிடும் பக்தர் கூட்டம் சிறந்ததாகும்
கிட்டச் சென்று திருப் பாதம் பற்றும்
நம் பணி மிகவும் உயர்ந்ததாகும் (அர்ச்சக)
ஆடை ஆபரணங்கள் அளவின்றி அளிப்பவர்
அரு யதாகும்
அபிஷேக, அலங்காரம் அன்றாடம் செய்யும் பணி
அர்ச்சகருக்கே உரியதாகும் (அர்ச்சக)
பூ, பழம் தந்து போற்றிடச் சொல்வது
புண்ணியர்கள் வழிகளாகும்
பொலிகின்ற முகத்தோடு பொன்னடிப் போற்றிப்
புகழ்வது அர்ச்சகராகும் (அர்ச்சக)
அறுசுவை உண்டியை அமுதெனப் படைத்திடும்
அன்பர் பணி ஏற்றதாகும்
ஆராதனம் செய்து அவன் உண்ணச் செய்வது
அதை விடப் போற்றதாகும் (அர்ச்சக)
தெள்ளு தமிழ் வேதம் தினம் திரண்டு செப்பும்
தெய்வப் பணி அருமையாகும்
தீர்த்தம் முதல் சடாரி துளசி வரை வழங்கும்
அர்ச்சகப் பணி பெருமையாகும் (அர்ச்சக)
எத்துனை இடர் வரினும் இத்தரை மீதினில்
எம் பணியை தொடர்ந்திடுவோம்
- இதை எதிரொலிக்கும் ஸ்ரீவைகானஸம் இதழ்தனை
மறவாமல் என்றுமே வாங்கிடுவோம். வாழ்க வைகாநஸம்!

RDIS No.779/99 SRI VAIKANASAM REGD. No. TN/Chief-PMG-123/2000

விக்ரம வருஷ ஸ்ரீ வைகானஸ சுத்தவாக்கிய

சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்

☞ திருமணம், சீமந்தம், உபநயணம், க்ரஹப் ப்ரவேசம், கும்பாபிஷேகம் போன்ற நல்ல நாட்கள் வரும் சித்திரை 2000 முதல் கார்த்திகை 2001 (20 மாதங்கள்) வரை கொடுக்கப் பட்டுள்ளது.

☞ நீங்களே உங்கள் நட்சத்திரங்களுக்கு ஏற்ற நல்ல நாட்களை சுலபமாக தெரிந்து கொள்ளும் வகையில் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

☞ நட்சத்திரம் மற்றும் திதிகளுக்கு மணி-நிமிடம் கொடுக்கப் பட்டுள்ளது.

☞ குறைந்த விலையில் அதிகமான விஷயங்கள் கொண்ட ஒரே சர்வ முகூர்த்த பஞ்சாங்கம் இதுவே.

ஒரு பிரதியின் விலை ரூ.10/- மட்டும் (ஸ்ரீவைகானஸ குலஸ்வாமிகளுக்கு மட்டும்) தபால் செலவு ரூ.5/- சேர்த்து அனுப்பவும்.

தங்கள் தெளிவான முகவரியுடன் M.O. செய்யவும்.

கணித்து வெளியிடுபவர்:

SRYAS D. முரளி பட்டாச்சாரியார்

24, எல்லையம்மன் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன் : 044-4710036

Sri: ☎ 8552180

THANJAI MOORTHY

16, NORTH TANK SQUARE STREET,
TRIPLICANE, CHENNAI - 5.

எங்களிடம் 108 திவ்யதேசப்பெருமாள் படம், பெருமாள் படம் போட்ட மேக்னட், கீசெயின், பெருமாள் டாலர்கள், யந்த்ரங்கள், நவரத்ன மாலை, துளஸி மாலை, ஸ்படிக மாலை, நல்முத்துமாலை, திருமண் ஸ்டிக்கர், திருமண் பெட்டி, லேமினேஷன் செய்தபெருமாள் படங்கள் முதலானவை சகாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

Edited by N.S. Parthasarathy Battachariar & D. Mohan Battachariar. *Printed at:* Guru Achagam, Triplicane,Chennai-600 005. *Published by:* A K S Trust, 24, Ellaiamman Koil Street, West Mambalam, Chennai - 600 033.